




# தினக்குரல்

யாழ் தினக்குரல் THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com








ஓசை : 020 குரல் : 264 வெள்ளிக்கிழமை 03 டிசம்பர் Friday 03rd December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/- பக்கங்கள் : 12


# வெடிப்புகளின் பின்னணியில் இரகசியத் திட்டமா?

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் விளையாடி அரசைப் பெற்றவர்களுக்கு சிலிண்டர்களை வெடிக்க வைப்பது பெரிய விடயமல்ல -ஹரீன் எம்.பி.





-பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் விளையாடி அரசாங்கத்தை பெற்றவர்களுக்கு இந்த எரிவாயு சிலிண்டர்களை வெடிக்க வைப்பது பெரிய விடயமல்ல என தெரிவித்துள்ள எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ, எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பதன் பின்னணியில் லிட்ரோ நிறுவனத்தை விற்பதற்கான திட்டம் இருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

இதனால் எரிவாயு சிலிண்டர் வெடிப்பின் பின்னால் அரசாங்கம் இருக்கின்றதா? என்ற சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் துறைமுக மற்றும் கப்பல் துறை அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே » பக்கம் 02


செலான் வங்கியில்
தங்கப்பவுனுக்கு அதிகபட்ச முற்பணத்தொகை
ரூ. 87,000/=
குறைந்த வட்டி வீதத்தில்
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது 0779811456 ஐ அழைக்கவும்
யாழ்ப்பாணம், நெல்லியடி மற்றும் வவுனியா கிளைகளில் சனிக்கிழமைகளிலும் தங்கக்கடன் சேவை இடம்பெறும்
செலான் தங்கக்கடன் Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)




காஸ் சிலிண்டர், அடுப்புக்கள் வெடிப்பதால் அச்சம் காரணமாக பெண்கள் சமையலறையில் ஹெல்மட் அணிந்து சமைக்கும் புகைப்படங்கள் ஊடகங்களில் பரவி வருகின்றன. பலப்பிட்டிய வத்துகெதர பிரதேச வீடு ஒன்றில் பெண்ணொருவர் ஹெல்மட் அணிந்தவாறு சமையலில் ஈடுபடும் காட்சி இது...

# வெடிப்புகளுக்கு காரணம் இதுவா?

-வேதியியலாளர் கலாநிதி பியல் அரியனந்த கூறுகிறார்-



க.பிரசன்னா

இலங்கையின் எரிவாயு தரத்துக்கு ஏற்றவகையிலேயே சிலிண்டரின் வால்வு மற்றும் ரெகுலேட்டர் என்பன தயாரிக்கப்படுகின்றன. எனவே எரிவாயு கலவையில் மாற்றம் ஏற்படுமாயின் இவை வெடிக்கும் ஆபத்து காணப்படுவதாக ஐக்கிய இராச்சியத்தின் வேதியியல் சங்கத்தின் இலங்கை கிளையின் தலைவர் வேதியியலாளர் கலாநிதி பியல் அரியநந்த தெரிவித்துள்ளார்.

உலகளவில் எரிவாயு கலவையில் வித்தியாசம் காணப்படுகின்றது. இலங்கையில் எரிவாயு கலவையில் பியூட்டேன் 80 வீதமும் புரப்பேன் 20 வீதமும் காணப்படுகின்றது. இந்நிலையில் அண்மையில் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் எரிவாயு கலவையில் 50:50 என மாற்றம் ஏற் » பக்கம் 02

# ஓமிக்ரோன் நுழைந்ததா? ஓரிரு நாட்களில் தெரியும்

-இதுவரை நுழையவில்லை என்கிறார் கலாநிதி சந்திம ஜீவந்தர-



ந.ஜெயகாந்தன்

கொவிட் பிறழ்வான 'ஒமிக்ரோன்' வைரஸ் இலங்கைக்குள் நுழைந்துள்ளதா என்ற ஆய்வுகள் நடத்தப்பட்டு வருவதாகவும், இதன் முடிவுகள் எதிர்வரும் நாட்களில் வெளியாகும் என்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் ஒவ்வாமை பிரிவின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

'ஒமிக்ரோன் வைரஸை எதிர்கொள்ள நாடு தயாரா?' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தினால் வீடியோ தொழில்நுட்பவம் ஊடாக நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது » பக்கம் 02

## ஒமிக்ரோன் நுழைவதை தடுக்க முடியாது

-பேராசிரியர் நீலிகா மாலவிகே-



ந.ஜெயகாந்தன்

புதிதாக வெளிநாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ள கொவிட் பிறழ்வான 'ஒமிக்ரோன்' வைரஸ் நாட்டுக்குள் நுழைவதை கட்டுப்பாடுகளின் மூலம் தடுக்க முடியுமென்று கருதவில்லை என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு அறிவியல் துறையின் » பக்கம் 02

# இலங்கைக்கு வரும் அனைவருக்கும் சோதனை

-இலங்கை வைத்திய சங்கத்தின் தலைவர்-

க.பிரசன்னா

தென்னாபிரிக்காவில் தோன்றிய ஒமிக்ரோன் வைரஸ் திரிபின் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகைதரும் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுக்கும் நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிக்குமாறு இலங்கை வைத்திய சங்கத்தின் தலைவர் டொக்டர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள 60 வயதுக்கும் மேற்பட்ட அனைத்து முதியவர்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசியினை பெறுவது கட்டாயமாகும். ஒமிக்ரோன் கொவிட் திரிபானது பல நாடுகளுக்கு வேகமாக பரவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வெளிநாட்டிலிருந்து இலங்கை வரும் சகலருக்கும் பி.சி.ஆர். பரிசோ » பக்கம் 02

# ஒமிக்ரோன் நுழைந்தாலும் நாடு மூடப்படாது

-சுகாதார அமைச்சின் செயலாளர்-

ந.ஜெயகாந்தன்

ஒமிக்ரோன் வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முடக்கினால் மக்களினதும், நாட்டினதும் வருமான வழிகளே இல்லாமல் போகும் என்றும் இதனால் நாட்டை முடக்காது சுகாதார ஒழுங்குவிதிகளை பின்பற்றி தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுப்பதே சிறந்ததாக இருக்கும் என்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் எஸ்.எச்.முனசிங்க தெரிவித்துள்ளார்.

'ஒமிக்ரோன் வைரஸை எதிர்கொள்ள நாடு தயாரா?' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தினால் வீடியோ தொழில்நுட்பம் ஊடாக நேற்று வியாழக்கி » பக்கம் 02

# யாழில் கரையொதுங்கும் சடலங்கள் யார் இவர்கள்? மர்மம் நீடிக்கிறது

-நேற்றும் 2; ஒரே வாரத்துக்குள் 6-



வடபகுதி கடற்பரப்பில் அடுத்தடுத்து ஒதுங்கும் இனந்தெரியாத சடலங்களினால் பொதுமக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கரையொதுங்கும் சடலங்கள் ஒன்றுகூட இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இந்நிலையில் யார் இவர்கள்? எவ்வாறு இறந்தார்கள்? என்பது தொடர்பில் மர்மம் நீடிக்கிறது. கடந்த 27 ஆம் திகதி » பக்கம் 02

# யாழ். தீவக திட்டங்களை இடைநிறுத்தியது சீனா

இலங்கையின் வடபகுதியில் உள்ள தீவுகளில் முன்னெடுக்கவிருந்த மின் உற்பத்தி திட்டங்களை சீன நிறுவனம் இடைநிறுத்தியுள்ளதாக இலங்கைக்கான சீன தூதரகம் தனது டுவிட்டர்செய்தியில் தெரிவித்துள்ளது.

மூன்றாம் தரப்பொன்று வெளியிட்ட பாதுகாப்பு கரிசனைகள் காரணமாக மின் உற்பத்தி திட்டங்களை சீன நிறுவனம் இடைநிறுத்தியுள்ளதாக சீன தூதரகம் தெரிவித் » பக்கம் 02

# அசாத் சாலி விடுதலை



க.பிரசன்னா

முன்னாள் மேல் மாகாண ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணி தலைவருமான அசாத் சாலிக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு குற்றச்சாட்டுக்களில் இருந்தும் அவர் விடுவிக்கப்படுவதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மத, இன பேதங்களை தோற்றுவிக்கும் வகையில் கருத்து வெளியிட்டதாக முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக சட்டமா அதிபரினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைகள் கடந்த மாதம் 19 ஆம் திகதி நிறைவு பெற்றிருந்தது. எனினும் குற்றம் சாட்டப்பட்டவர் வெறுப்புணர்வை அல்லது இனவாதத்தைத் தூண்டும் வகையில் அறிக்கைகளை வெளியிட்டார் என்பதை நிரூபிக்க மனுதாரர் தவறியுள்ளதாக கூறி அசாத் சாலியை » பக்கம் 02

# 12.5 கிலோ சிலிண்டரில் 9.5 கிலோ வாயுவே உள்ளது

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

இலங்கையில் 12.5 கிலோ நிறைகொண்ட எரிவாயு சிலிண்டர்களில் 9.5 கிலோ நிறை கொண்ட எரிவாயு மாத்திரமே நிரப்பப்பட்டது. இதன் காரணமாக கொள்கலன்களில் வெற்றிடம் அதிகமானது. அத்துடன் புரோப்பேன், பியூட்டேன் கலவைகளும் மாற்றப்பட்ட போது கொள்கலன்கனில் உள்ள வெற்றிடங்களின் ஊடாக அழுத்தம் அதிகரித்து சிலிண்டர்களில் கசிவு ஏற்பட்டு வெடிக்கின்றனவென ஜே .வி.பி. எம்.பி.யான விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற துறைமுகங்கள் அமைச்சு மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையின் சமையலறையிலேயே பாதுகாப்பு இல்லாத நிலையில் இந்த அரசினால் எப்படி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தமுடியும் ? 12.5 கிலோ நிறைகொண்ட எரிவாயு சிலிண்டர்களில் 9.5 கிலோ நிறை கொண்ட எரிவாயு மாத்திரமே நிரப்பப்பட்டுள்ளது.இதன் காரணமாக சிலிண்டர்களில் வெற்றிடம் அதிகமானது. அத்துடன் புரோப்பேன், » பக்கம் 02

## அசாத் சாலி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரபராதியாகக் கருதி விடுதலை செய்வதாக மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா நேற்று உத்தரவு பிறப்பித்திருந்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மார்ச் 16 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

இதேவேளை, முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக முறைப்பாட்டினை பதிவு செய்த பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் மற்றும் நிமல் பியதிஸ்ஸ, ஜயந்த வெல்லேபட ஆகிய மூவரையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

முன்னாள் ஆளுநர் அசாத் சாலி சார்பில் ஆஜரான சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, முறைப்பாடு செய்தவர்கள் அரசியல் உள் நோக்கத்தின் அடிப்படையில் தீங்கிழைக்கும் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்ததாக தெரிவித்திருந்ததுடன் மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரிடம் இருந்து நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு வரும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனைகளை மேற்கொள்ள பரிந்துரைக்கின்றோம்.

ஒமிக்ரோன் திரிபு ஐந்து மடங்கு வேகமாக பரவுமென கூறப்படுகின்றது. எனவே முடிந்தவரை இலங்கை வருவதை தாமதப்படுத்த வேண்டும். நோயெதிர்ப்பு சக்தி குறைந்து கடுமையாக நோய்வாய்ப்படும் நிலை உருவானால் வைத்தியசாலை கட்டமைப்பினால் அவற்றை சமாளித்து முன்னைய நிலைக்குத் திரும்பமுடியாது.

இதனால் பொதுமக்களுக்கு சுய பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் கட்டுப்பாடுகளை அதிகரிக்க வேண்டும். கொவிட் திரிபின் ஆபத்தான சூழ்நிலையினை தவிர்ப்பதற்கு முதியோருக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடைமுறை ஊக்குவிக்கப்பட வேண்டும்.

கொவிட் தொற்றினால் முதியோரே அதிக பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். அதிகமான மரணங்களும் இவர்களில் பதிவு செய்யப்படுகின்றது. மற்றுமொரு கொவிட் தடுப்பூசியானது, கொவிட் தொற்றுக்கு எதிராக பெரும் பாதுகாப்பை உருவாக்குகின்றது. எனவே புதிய திரிபுகளில் இருந்து விடுபடுவதற்கு தடுப்பூசி பெற்றுக்கொள்வதே ஒரே வழியாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

## வெடிப்புகளின் பின்னணியில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

துறைமுகங்கள் நாட்டுக்கு வருமானங்களை கொண்டு வரும் இடமாக இருக்கின்றது. நாடுகள் பல 900 மில்லியன் கொள்கலன்களை பயன்படுத்துகின்றன. ஆனால் இலங்கை இன்னும் 30 மில்லியன் கொள்கலன்களையே பயன்படுத்துகின்றன. இதேவேளை இலங்கைக்கு வரும் வர்த்தகங்களில் இடைமாறால் கப்பல்கள் ஊடாகவே நடக்கின்றன. வேறு நாடுகளுக்கு செல்லும் கப்பல்களே இங்கு வந்து செல்கின்றன.

போட்டிகளுடன் பார்க்கும் போது சீன நிறுவனத்திடம் இருக்கும் துறைமுக நடவடிக்கைகள் மூலம் அதன் இலாபம் எங்களுக்கு வருவதில்லை. சீனாவுக்கே செல்லும். அந்த வகையில் அம்பாந்தோட்டை துறைமுக விடயத்தில் பெரும் வட்டியில் கடன் பெற்றிருக்கையில், செய்வதற்கு ஒன்றுமில்லை. கடனால் உகண்டாவின் விமான நிலையத்தை சீனா பெற்றுக்கொண்டுள்ளது.

உலகின் தரப்பட்டியலில் சீனாவின் சென்காய் துறைமுகமே முதலிடத்தில் உள்ளது. இலங்கை 25 ஆவது இடத்திலேயே இருக்கின்றன. இந்நிலையில் சீனாவின் வியாபார உத்தியின்படி கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு வராது சீனாவின் கீழுள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு செல்லும் நிலைமையே ஏற்படும்.

தற்போது நாட்டில் எரிவாயு தொடர்பான பிரச்சினை ஏற்பட்டுள்ளது. கப்பல்கள் மூலமே எரிவாயு வருகின்றன. இந்நிலையில் எரிவாயுவில் புரோப்பைன் என்பது 40 டொலர்கள் அதிகமாகும். எரிவாயுவையே கொண்டு வர முடியாத நிலையில் இருக்கும் நாங்கள் ஏன் புரோப்பைன் 50 க்கு 50 என்று அதில் உள்ளடக்கி வெடிக்கச் செய்ய வேண்டும்.

கப்பல்களில் இருந்து இறக்கும் போது காணப்படும் கலவை தொடர்பில் ஏற்றும் போதும், இறக்கும் போதும் பார்க்கப்படுகின்றது. அதனால் இங்கு எங்கேயாவது விளையாட்டு செயற்பாடு உள்ளது. அண்மையில் லிட்ரோ நிறுவனம் விலை மதிப்பீடு செய்கின்றது. இதன்படி ஒருபக்கத்தில் அதனை விற்பதற்கு முயற்சிக்கப்படுவதுடன் மறுபக்கத்தில் எரிவாயுவுக்கான கேள்விகள் குறைக்கப்படுகின்றன.

இதனால் மக்கள் விறகு, மின்சார அடுப்பு ஆகியவற்றுக்கு செல்வதுடன், அரசாங்கத்திற்கு பணம் செலவழிக்காது சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. எல்லாவற்றையும் பெரியது எதுவென்றால் லாபமடைந்த நிறுவனமான லிட்ரோ அவசரமாக மதிப்பீடு செய்யப்படுகின்றது. இது எதற்கு?

லிட்ரோவை விற்பதற்கான பாதையை வெட்டுவதற்காகவா எமது அப்பாவி மக்களின் வீடுகளில் சிலிண்டர்கள் வெடிக்கின்றன. தொழில்நுட்ப பக்கம் தொடர்பில் கதைக்கின்றனர். அவ்வாறு இல்லை. இது உயிருடன் விளையாடும் செயற்பாடாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் விளையாடி அரசாங்கத்தை பெற்றவர்களுக்கு இந்த எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது பெரியவிடயமல்ல. இது தொடர்பாக ஆராய்ந்து பாருங்கள். லிட்ரோ நிறுவனத்தை விற்பதற்கு முயலும் விளையாட்டின் ஆரம்பமே எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு. இந்த நேரத்தில் அவசரமாக லிட்ரோ தொடர்பில் எதற்கு மதிப்பீடு செய்து கேள்வி மனுக்கோரல் செய்ய வேண்டும்.

எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கும் போது அதற்கான கேள்விகள் குறைவடையும். பணம் உள்ளவர் இலத்திரனியல் உபகரணத்திற்கு செல்லும். மற்றையவர் விறகு அடுப்புக்கு செல்ல நேரிடும். இதன்போது எரிவாயுவுக்காக செலுத்த வேண்டிய தொகை குறைவடையும். 7 மூளையின் வேலைத்தான். சிறந்த மூளை. இவ்வாறு செய்து லிட்ரோவை விற்க வேண்டுமாயின் 7 மூளைகள் வேண்டும்.

ஆகவே எரிவாயு சிலிண்டர் வெடிப்பின் பின்னால் அரசாங்கம் இருக்கின்றதா? என்ற சந்தேகங்கள் எங்களுக்கு இருக்கின்றது.

# ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் நேற்று திறந்து வைக்கப்பட்டது



யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தூய நகரம் திட்டத்திற்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் வாமதேவன் தியாகேந்திரனின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் நேற்று திறந்து வைக்கப்பட்டது . நேற்று மாலை 5.30 மணிக்கு யாழ்.மாநகர முதல்வரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகேராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக தியாகந்திரன் அர்ச்சுனா மற்றும் நிலாஜினி தியாகேந்திரனும் கலந்து கொண்டனர். இதன்போது ஆரியகுளத்தின் வரலாற்றை எடுத்துக்கூறும்வகையில் நினைவுக்கல் மூன்று மொழிகளிலும் திறந்து வைக்கப்பட்டதுடன் ஆரியகுளம் பெயர் பொறிக்கப்பட்ட எழுத்துரு திறக்கப்பட்டு,ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறந்து வைக்கப்பட்டது.

ஆரியகுளத்தை அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தை தன் செலவில் முன்னெடுத்த தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் வாமதேவா தியாகேந்திரனுக்கு அறக்கொடை அரசன் எனும் நாமம் சூட்டி மாநகர சபையால் மதிப்பளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வாண வேடிக்கைகள், தண்ணீர் விசிறல் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றது. மேலும்,மதத்தலைவர்கள், அரசியல்பிரமுகர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை ஆணையாளர். மாநகர சபை உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ச-40,75)

## ஒமிக்ரோன் நுழைவதை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதானி பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்துள்ளார்.

'ஒமிக்ரோன் வைரஸை எதிர்கொள்ள நாடு தயாரா?' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தினால் வீடியோ தொழில்நுட்பம் ஊடாக நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது நீலிகா மாலவிகே மேலும் தெரிவிக்கையில்,

24 நாடுகளில் இந்த வைரஸ் பரவியுள்ளது. நவம்பர் மாத ஆரம்பத்தில் இருந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது. இது பல்வேறு நாடுகள் சமூகத்திற்குள் பரவியுள்ளது. இதற்கு முன்னர் குறிப்பிடத்தக்க பிறழ்வுகள் காணப்பட்டன. ஆனாலும் அதனை விடவும் திரிபடைந்ததாகவும், டெல்டாவை விடவும் வேகமாக பரவும் தன்மை ஒமிக்ரோன் பிறழ்வு இருப்பதாக உலக சுகாதார தாபனம் அறிவித்துள்ளது.

ஒமிக்ரோன், டெல்டாவை போன்றோ அல்லது அதனை விடவும் பரவும் வேகத்தை கொண்டிருந்தால் எந்தளவுக்கு கட்டுப்பாடுகளை விதித்தாலும் அதனையும் தாண்டி பரவலாம். எல்லா தொற்றும் ஒரேவாறே பரவுகின்றன. எதுவாக இருந்தாலும் நாங்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகளை பின்பற்றி பாதுகாப்புடன் தயாராக வேண்டும்.

ஐரோப்பிய நாடுகளில் இரண்டு வாரங்களுக்கு முன்னரே இருந்துள்ளதாக இப்போது கூறப்படுகின்றது. இதனால் நாடுகள் பலவற்றில் இது பரவியிருக்கலாம் என்றார்.

## ஒமிக்ரோன் நுழைந்ததா?... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திம ஜீவந்தர மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் நிலைவரம் தொடர்பாக கூறுகையில், கடந்த வருடத்தில் தொற்று பரவல் ஆரம்பிக்கப்படும் போது அது தொடர்பான ஆய்வுகளுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்திருந்தோம். இப்போது எங்களிடம் அது தொடர்பான உபகரணங்கள் உள்ளன. இதன்படியே டெல்டா தொற்றை கண்டுபிடித்தோம்.

இந்நிலையில் தற்போது வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களின் மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதன்படி ஒமிக்ரோன் தொற்று உள்ளதா என்று ஆராயப்படுகின்றது. நாளை (இன்று) ஆய்வுகள் முடியலாம் என்று எதிர்பார்க்கின்றோம். இதன்படி இதுவரையில் அந்தத் தொற்று இலங்கையில் உறுதியாகவில்லை. எதிர்வரும் நாட்களில் இதன் ஆய்வு முடிவுகள் வெளியாகவுள்ளன என்றார்.

## யாழ். தீவக திட்டங்களை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

இதேவேளை மாலைதீவில் 12 சூரியசக்தி நிலையங்களை ஏற்படுத்துவதற்காக அந்த நாட்டுடன் சீன நிறுவனம் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது என சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

## யாழில் கரையொதுங்கும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு மணற்காட்டு பகுதியிலும் அன்றைய தினம் வல்வெட்டித்துறை பகுதியிலும் இரண்டு சடலங்கள் கரையொதுங்கின. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு பகுதியில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியது.

அதனைத் தொடர்ந்து வெற்றிலைக்கேணி பகுதியில் செவ்வாய்க்கிழமைசடலம் ஒன்று கரை யொதுங்கியது. இதனை தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை பிற்பகல் சுப்பர்மடம் கடற்கரையில் இனம்தெரியாத சடலமொன்று கரையொதுங்கியது.

அத்துடன், நேற்று மாலை மருதங்கேணி -சுண்டிக்குளம் - பூனைத்தொடுவாய் பகுதியில் மேலும் ஒரு சடலம் கரையொதுங்கியது.

ஒரு வாரத்தினுள் வடபகுதி கடற்பரப்பில் இனம் தெரியாத 06 சடலங்கள் கரையொதுங்கி இருப்பது பொது மக்களிடத்தில் பெரும் அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளது.

(ச-44,75)

## வெடிப்புகளுக்கு காரணம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருக்குமாயின் அவற்றின் மூலமான அழுத்தமானது 25 வீதம் அதிகமாக காணப்படும். எனவே 80:20 என்ற வாயு கலவைக்கு ஏற்றவகையில் உருவாக்கப்பட்ட வால்வு மற்றும் ரெகுலேட்டர் என்பன 50:50 என்ற வாயு கலவை மாற்றத்தினால் வெடிப்புக்குள்ளாகும் நிலை காணப்படுகின்றது.

அதேவேளை இலங்கையில் விற்பனை செய்யப்படும் மற்றும் பாவிக்கப்படும் இலத்திரனியல் பொருட்கள் உட்பட பல பொருட்களுக்கு தரநியமங்கள் காணப்படாமையும் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அமெரிக்கா போன்ற நாடுகளில் தேசிய தரநிலைகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தால் அந்நாட்டு மக்கள் பாவிக்கும் சகல உபகரணங்கள் தொடர்பிலும் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு தரநியமங்கள் வழங்கப்படும்.

இலங்கையில் விற்பனை செய்யப்படும் உபகரணங்களுக்கு அவ்வாறானதொரு நிலைமை இல்லை. சிலிண்டர்கள் அதிக அழுத்தத்தை தாங்கக்கூடிய வகையிலேயே உருவாக்கப்படுகின்றது. எனவே எரிவாயு சிலிண்டர்களுடன் விற்பனை செய்யப்படும் ரெகுலேட்டர்கள் அதற்கு ஏற்றவகையில் உருவாக்கப்பட்டாலும் வெளியில் கொள்வனவு செய்யப்படும் ரெகுலேட்டர்கள் பெரும்பாலும் தரநியமங்களுக்கு உட்பட்டதாக இருப்பதில்லை. நாட்டில் உள்ள பிரபல வர்த்தக நாமங்களுக்கு மாத்திரமே தரநிலை வழங்கப்படுவதாகவும், இலத்திரனியல் உள்ளிட்ட தரமற்ற பொருட்களை சந்தைக்கு விடுவது மற்றுமொரு பிரச்சினையாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் பரவியது ஒமிக்ரோன் திரிபு

ஆபத்தானதாகக் கருதப்படும் ஒமிக்ரோன் புதிய உருதிரிபு கொரோனா வைரஸ் இந்தியாவிலும் நேற்று வியாழக்கிழமை கண்டறியப்பட்டது.

கா்நாடகா மாநிலத்தில் ஒமிக்ரோன் புதிய திரிபு தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட இரண்டு பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக இந்திய மத்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 66 மற்றும் 46 வயதுகளை உடைய இரண்டு ஆண்களே ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்கள் கண்டறியப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக இந்திய மத்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## 12.5 கிலோ சிலிண்டரில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பியூட்டேன் கலவைகளும் மாற்றப்பட்டபோது சிலிண்டர்களில் உள்ள வெற்றிடங்களின் ஊடாக அழுத்தம் அதிகரித்து சிலிண்டர்களில் கசிவு ஏற்படுகிறது.

சிலிண்டர்களில் கலவை மாற்றப்பட்டு நிறையும் குறைக்கப்பட்டபோது, அதற்கு ஈடு செய்யும் வகையில் ரெகுலேட்டர்களும் இணைப்புக் குழாய்களும் மாற்றப்பட்டிருக்க வேண்டும், எனினும் அது செய்யப்படாத காரணத்தினாலேயே இன்று எரிவாயு சிலிண்டர்களில் வெடிப்புகள் ஏற்படுகின்றன.

இவ்வாறான நிலையில் இந்த ஆபத்தான விடயம் தொடர்பில் ஜனாதிபதி உடனடியாக செயற்படாமல், இரண்டு வாரங்களில் அறிக்கையை பெற்று தீர்வைக் கொடுப்பதாக கூறுகின்றார்.

அதற்குள் பல இடங்களில் எரிவாயு சிலிண்டர் வெடிப்புக்கள் ஏற்பட்டுவிடும். எனவே சிலிண்டர்களை திரும்பப் பெற்று அதற்கு பதிலாக புதிய சிலிண்டர்களை விநியோகிக்க வேண்டும்.

இதேநேரம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கி அதற்கு விசேட வரிச்சலுகை வழங்குவதற்கான யோசனைக்கு மஹிந்த ராஜபக்ச தலைமையிலான எம்.பி.க்கள் எதிராக வாக்களிக்கவில்லை. எனவே அந்த துறைமுக விற்பனைக்கு மஹிந்த ராஜபக்ச தரப்பினரும் பொறுப்பேற்கவேண்டும். அன்று அதற்கு எதிராக ஜே.வி.பி. மாத்திரமே வாக்களித்தது.

இன்று பெரும்பாலான தோட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வசதி செய்துகொடுக்கப்படாதபோதும் பெருந்தோட்ட பகுதிகளில் இருந்து ஏனைய இடங்களுக்கு குடிநீர் திட்டங்கள் கொண்டு செல்லப்படுகின்றன உரிய வேதனம் கிடைக்காமல், கோதுமா மாவின் விலையதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள, நாட்டுக்கு அதிக அந்நிய செலாவணியை பெற்றுக்கொடுக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு குடிநீரையாவது பெற்றுக்கொடுக்கவேண்டும் என்றார்.

## ஒமிக்ரோன் நுழைந்தாலும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நாட்டை முடக்கினால் வைரஸை கட்டுப்படுத்த முடியுமென்று கூறினர். இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் நாட்டை மூடினோம். பூச்சியம் வரையில் தொற்றாளர் எண்ணிக்கை குறைந்தாலும் திறந்த பின்னர் மீண்டும் அதிகரித்தது. இதன்போது மீண்டும் மூடும் நிலை உருவானது. இவ்வாறு நாட்டை மூடும் போது மக்களின் வாழ்வாதரமே பாதிக்கப்படும். நாட்டை மூடியிருந்த போது மக்கள் தமது பிரச்சினைகளை கூறியுள்ளனர்.

அத்துடன் சுற்றுலாத்துறையை எடுத்துக்கொண்டால் அவர்களின் மூலம் மட்டுமே இது வரவில்லை. இதனை விடவும் நாட்டுக்குள் வைரஸ் வருவதற்கான வழிகள் உள்ளன. இதனால் சுற்றுலாத்துறையினர் வருவதை தடுப்பதன் மூலம் நாட்டில் வைரஸை கட்டுப்படுத்த முடியுமென்ற நிலைப்பாட்டில் சுகாதார அமைச்சு இல்லை. சுற்றுலாப் பயணிகள் முறையாக சுகாதார ஒழுங்குவிதிகளுடன் இருந்தால் அவ்வாறான பிரச்சினை ஏற்படாது.

அதேபோன்று நோயை கட்டுப்படுத்துவதற்காக நாட்டை மூடி வருமான வழிகளை மூடுகின்றோம். மக்களுக்கு உணவுக்கு பணம், மருந்து கொள்வனவுக்கான பணம் இல்லாமல் போகும். அதன்படி அங்கு வரும் வருமானம் இங்கு இல்லாமல் போவதை பார்க்கும் போது இதனை நியாயப்படுத்த முடியுமாக இருக்கும். இதன்படி நாட்டை மூடாது ஒழுங்குவிதிகளை பின்பற்றி செய்தால் அனைத்தையும் முன்னெடுக்க முடியும்.

# திரிபடைந்த மிக்கிறோன் வைரஸ் தாக்கம் உலகை பாரிய சவாலுக்குள்ளாக்கும்

**-யாழ். போதனா வைத்தியசாலை பிரதி பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா-**



திரிபடைந்த மிக்கிறோன் வைரஸ் தொற்றானது அடுத்த இரண்டு வருடங்களுக்கு உலகளாவியரீதியில் முக்கியமான ஐந்து துறைகளில் பாதகமான விளைவினை ஏற்படுத்தும் என் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்தொற்றால் உலகில் பூகோளமயமாதல் சவாலுக்கு உட்படுத்தப்படும், உலகின் பொருளாதார ஓட்டம் மந்தமடையும், உலகின் மக்களின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்துக்கு குந்தகம் ஏற்படும், உலகில் நாடுகளின் அரசியலில் ஸ்திரத்தன்மை குலைந்து, ஜனநாயக அமைதியின்மை ஏற்படும்., மக்களின் வாழ்க்கை நிலை (Life Style and Entertainment) வீழ்ச்சியுறல் என்பன போன்ற தாக்கத்தை ஏற்படுத்தும்.

மேலும் ஒவ்வோர் நாடுகளும் எதிர்வரும் இரண்டு வருடங்களில் மருத்துவ அவசர நிலையினை ஒவ்வோர் நாடும் பிரகடனப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும், பொருளாதார நெருக்கடியால் தொழிற்சங்கப் போராட்டங்கள் மக்களை மீண்டும் மீண்டும் பாதிப்பதனால் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு இரண்டு வருடத்திற்கான தடையுத்தரவு தேவைப்படும். மேலும் ஜனநாயக முறையில் அரசியல் பிளவுகளை அதிகரிக்காது இருப்பதற்கு தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கான அல்லது அரசாங்கத்தினைத் தொடர்ந்து இயக்குவதற்கான சர்வசன வாக்கெடுப்பு நிகழ்த்தப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

பாரிய முதலீட்டுச் செயற்திட்டங்களை 2 வருடங்களுக்கு முன்னெடுக்காதும், ஆரம்பச் செலவுகளை முடக்குவதனாலும் மட்டுமே உலக பொருளாதார மந்தநிலையின் வேகத்துடன் ஒரு நாடு பயணிக்க முடியும். இதனால் ஆடம்பரச் செலவுகளுக்கு வரி அறவிடும் தன்மை தவிர்க்க முடியாது போகும்.

மக்கள் வறுமையால் பாதிப்படையாது இருப்பதற்கு நுண்ணிய விருத்தியை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியம். இதற்காகக் கிராமியப் பொருளாதாரத்திலும், விவசாயம்சார், கைத்தொழில்சார் தொழில் முயற்சிகளையும் அதிகரித்தல் வேண்டும். சிறு வர்த்தகர்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். கடல்சார் உற்பத்திகள் அதிகரிக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு நாடும் அடுத்த இரண்டாண்டுகளுக்கான கல்விசார்ந்த செயற்திட்டங்களையும், தொழில்நுட்பம் சார்ந்த செயற்றிட்டங்களையும் முறையாகச் செயற்படுத்தல் வேண்டும். இதனாலேயே இன்றைய இளம் சந்ததியினரின் பெரும்பகுதியினர் சமூக மேன்னிலையில் பின்னடைவு இல்லாது முன்னேற முடியும்.

அடுத்து மருத்துவத்துறையில் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளாகப் பின்வருவன அமையும்.

கோவிட் தொற்றுக்கு எதிரான செயற்றிட்டங்கள். இவை தேசிய அளவிலும், மாகாண அளவிலும், மாவட்ட அளவிலும், கிராம மட்டத்திலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். கோவிட் தடுப்பூசி விசேடமாக முன்னிலைப்படுத்தல் அவசியம்.

நோயெதிர்ப்புச்சக்தி குறைந்த எயிட்ஸ் நோயாளிகள், புற்று நோயாளிகள் போன்றோரில் கோவிட் தீநுண்மி சுமார் 200 நாட்கள் வரை உயிர் வாழலாம். இதன்போது இந் நோய்க்கிருமி பல விகாரங்களுக்கு உட்படும். எனவே இத்தகையோருக்கு தடுப்பு மருந்து ஒழுங்கான கால இடைவெளியில் வழங்கப்பட வேண்டும். தடுப்பு மருந்து அனைவருக்கும் கிடைக்கும் வரையும் அடுத்து கொரோனா நிவாரணி மருந்து கண்டறியப்படும் வரையும் உலகில் கொரோனாத் திரிவுகளின் தோற்றத்தை தவிர்க்க முடியாது.

கோவிட் தொற்று முதன்மைப்படுத்தப்படினும் ஏனைய தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் மிகவும் இன்றியமையாதவை ஆகின்றன. பிரதானமாக டெங்குநோய், காசநோய், எயிட்ஸ்நோய், தொழுநோய் என்பவற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவத்தினை நாம் மேற்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக சமூக உளத்தாக்கங்களைச் சிறப்பாகக் கையாள்வதற்கான நடைமுறைப் பொறிமுறையினை வலுவூட்ட வேண்டிய அவசியம் அடுத்த இரு வருடங்களுக்கு மிகவும் இன்றியமையாததாகின்றது. குறிப்பாக போதைவஸ்துப் பாவனைக் கட்டுப்பாடு, தற்கொலைத் தடுப்பு, குடும்ப வன்முறைகள் தடுப்பு என்பன முக்கியம் பெறும்.

அடுத்து சிறுவர்கள், பெண்கள், கர்ப்பிணித்தாய்மார்களுக்கான நலத்திற்கு சிறப்பு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும். மருத்துவ சேவைகளை வழங்கலில் உள்ள இடையூறுகள் நாட்பட்ட நோயுடையோரின் நலனைப் பாதிக்காதவாறு அவர்களுக்கான கிரமமான மருத்துவப் பரிசோதனைகளும், சிகிச்சை வழங்கலும் மிகவும் முக்கியமானவையாகும். (30)

# ஒதியமலைப் படுகொலையின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல்

**-உணர்வுடன் நேற்று இடம்பெற்றன-**



முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைப் பகுதியில், கடந்த 1984.12.02 அன்று இராணுவத்தினாலும், சிங்கள காடையர்களாலும் அப்பாவித் தமிழ்மக்கள் 32பேர் சுட்டும், வெட்டியும் மிலேச்சத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். குறித்த படுகொலை நாளின் நினைவேந்தல் நிகழ்வுகள், ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் மாதம் இரண்டாம் திகதி இடம்பெற்றுவருகின்றன.

அந்த வகையில் குறித்த ஒதியமலைப் படுகொலையின் 37 ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றைய தினம், ஒதியமலை சனசமூகவளாகத்தில் படுகொலைசெய்யப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் உணர்வுடன் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஒதியமலைப் பிள்ளையார் ஆலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக விசேட ஆத்மசாந்தி வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன. மேலும் இந் நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா-ரவிகரன், முன்னாள் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, ஒட்டுசுட்டான் பிரதேச சபை உறுப்பினர் இ.சத்தியசீலன், ஒதியமலை கிராம அபிவிருத்தி சங்க தலைவர் இ.கிரிதரன், முன்னாள் கிராமஅபிவிருத்திசங்கத்தலைவர் கந்தசாமி, படுகொலை செய்யப்பட்டோரின் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (56)

# வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் திருட்டு

**-பொலிஸார் விசாரணை-**



வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இரவு தாதியின் அறை உடைக்கப்பட்டு ரூபா ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பணம் மற்றும் உணவுப் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரி திருமதி றதினி காந்தநேசன் தெரிவித்துள்ளார்.

குறித்த வைத்தியசாலையில் பணியாற்றும் தாதியான திருமதி சசிகலாராணி விஜயசுகுமார் (வயது-57) என்பவரின் அறையே இவ்வாறு உடைக்கப்பட்டுப் பணம் மற்றும் உணவுப் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி வைத்தியசாலையில் பணியாற்றும் குறித்த தாதி, பிரதி புதன்கிழமை மட்டும் வீட்டுக்குச் செல்வதாகவும் ஏனைய நாட்களில் முழுநேரமும் கடமையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இவருடைய சம்பளப் பணத்தின் ஒரு தொகை, வைத்தியசாலை அபிவிருத்திச்சங்கப் பணம், வருட இறுதி ஒன்றுகூடலுக்காக வைத்தியசாலை அலுவலர்களிடம் பெற்றுக்கொண்ட பணம், வைத்தியசாலையின் இதர பணம் மற்றும் உண்டியல் பணம் என மொத்தம் 1 இலட்சத்து எண்ணூற்று 37 ரூபா பணமும் தனது உணவுப் பொருட்களும் திருடப்பட்டுள்ளதாகத் தாதி தெரிவித்தார்.

திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற அன்று இரவு வைத்தியசாலைக் காவலாளி, நோயாளர் காவு வண்டிச் சாரதி மற்றும் பணியாளர்கள் இருவர் இருந்ததாகவும் வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

அதேநேரம், வைத்தியசாலையில் கண்காணிப்பு கமரா இன்னமும் பொருத்தப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்துச்சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் குணதிலக மற்றும் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (75,40)

# மரிய சேவியர்அடிகளாரின் 82 ஆவது அகவை தினம்

திருமறைக்கலாமன்றத்தின் 57 ஆவது ஆண்டின் ஆரம்பத்தையும்,ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரிய சேவியர் அடிகளாரின் 82 ஆவது அகவையையும்நினைவு கூர்ந்து இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு இல.17 மார்டின் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைஞானசுரபியான இல்லத்தில் நன்றி வழிபாடும், தொடர்ந்து காலை 9.30 மணிக்கு இல238,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் இரத்த தான நிகழ்வும் இடம்பெறும்.

மாலை நிகழ்வாக அமரர் நீ.மரிய சேவியர் அடிகளாரை அவரது பிறந்த நாளில் நினைவுகூரும் முகமாக 'மரிய சேவியர் அடிகளாரின் நினைவுகளுடன் சிறு பொழுது' என்னும் நிகழ்வு மாலை 5.00 மணிக்கு இல,286,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வுகளில் அங்கத்தவர்கள் அனைவரையும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அழைக்கப்படுகிறார்கள்(ஜெ-28)

# தேர்தல் ஆணைக்குழ தலைவர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்



ரொசான் நாகலிங்கம்

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிகேவா மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இன்று அவர் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் மாவட்ட தேர்தல் அலுவலகக் கட்டிடத்தை பார்வையிட்டு ஆராயவுள்ளார்.

இதையடுத்து மறுநாள் சனிக்கிழமை பொலிஸார், தேர்தல் கண்காணிப்பு அமைப்பு பிரதிநிதிகள்,தேர்தலின் போது முறைப்பாட்டை பெற்றுக் கொள்ளும் அதிகாரிகளுக்கு தேர்தல் முறை தொடர்பிலான முழுநாள் கருத்தரங்கை நடத்தவுள்ளார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வாக்குரிமை விழிப்பூட்டல்களை மக்கள் மத்தியில் மேற்கொள்வதற்கான 2022-2025 வரையான காலப்பகுதிக்கான மூலோபாய செயற்திட்டத்தனை தயாரிப்பதற்கான கருத்துக்களை பெற்றுக் கொள்ளுமகமாக அரச அலுவலர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றம் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை நடத்தவுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# எரிவாயு வெடிப்புகள் ஏன்? ஆய்வறிக்கை கூறுவது என்ன?

க.பிரசன்னா

எரிவாயு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் 12 மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளை கொண்டு மொரட்டுவ பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வின் அறிக்கை பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன. எனினும் அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பாக வெளிப்படுத்தப்படவில்லை. பேராசிரியர் சனத் வல்பொல தலைமையிலான குழுவினால் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதற்கு அனுமதியில்லையெனவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார். இதேவேளை நாட்டில் நேற்று மேலும் ஒன்பது எரிவாயு கசிவின் மூலமான வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் எரிவாயு கசிவின் மூலமாக 73 வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவற்றில் 15 பேர் காயமடைந்துள்ளதுடன் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொட்டாவ, அம்பலாங்கொட, வெல்லம்பிட்டி, கிரிவுல்ல, கொட்டகலை, யாழ்ப்பாணம் - நல்லூர், கம்பஹா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொசோவிட்ட பிரதேசத்திலும், வெயாங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹீன்தெனிய பிரதேசத்திலும், பல்லேவெல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹன்சகிரிய பிரதேசத்திலும் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.இதேவேளை நவம்பர் 30 ஆம் திகதி நாடு முழுவதும் எரிவாயுடன் தொடர்புடைய 34 வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. கடந்த நவம்பர் 29 ஆம் திகதி நாட்டில் 16 வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. கடந்த நவம்பர் 4 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 28 ஆம் திகதி வரை மொத்தமாக ஒன்பது வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

எரிவாயு கலவையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கூறப்பட்டாலும் எரிவாயு நிறுவனங்கள் தொடர்ச்சியாக அவற்றை மறுத்து வருகின்றன. இதேவேளை எரிவாயு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் 12 மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளை கொண்டு மொரட்டுவ பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வின் அறிக்கை பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன. எனினும் அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்படவில்லை.


## அக மகிழ்ந்து நன்றி தெரிவிக்கின்றோம்



பூநகரி பிரதேச பாடசாலைகளான கிளி/பூநகரிமகாவித்தியாலயம்,கிளி/செல்லையா தீவு அ.த.க.பாடசாலை,கிளி/பூநகரிநல்லூர்மகாவித்தியாலயம்,கிளி/முக்கொம்பன் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்பிக்கும் யாழ்.மாவட்ட ஆசிரியர்களாகிய நாம் நீண்ட காலமாக பாடசாலை செல்வதற்கான முறையான அரச போக்குவரத்து சேவையின்றி தவித்த வேளையில் எமது கோரிக்கையை ஏற்று மூளாயிலிருந்து-சுழிபுரம்- சித்தன்கேணி-சங்கானை-சண்டிலிப்பாய்-மானிப்பாய்-உடுவில்-மருதனார்மடம்-சுண்ணாகம்-மருதனார்மடம்-உரும்பிராய்-கோப்பாய்-கைதடி-சாவகச்சேரி-தனங்கிளப்பு-பூநகரி ஊடாக முக்கொம்பன் வரையான ஓர் அரச பேருந்து சேவையை ஏற்படுத்தித்தந்த கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் கௌரவ அமைச்சர் **டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அமைச்சரது பணிப்புரைக்கு அமைவாக இப்பேருந்து சேவையின் வழித்தட ஒழுங்கு, நேர ஒழுங்கு என்பவற்றை முறையாக ஏற்படுத்திக் கொடுத்த ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் திரு.பாலகிருஷ்ணன் (ஜீவன்) அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றியுடன்
இப்பேருந்து சேவையால் பயன்பெறும் ஆசிரியர்கள்.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
வெள்ளிக்கிழமை 03 டிசம்பர் 2021 Friday 03rd December 2021

## நன்கொடை அறவிடப்படுவது இலவச கல்விக் கொள்கைக்கு அவமரியாதை

பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்த்தவுடன் நன்கொடை வழங்குமாறு பாடசாலை நிர்வாகங்கள் பெற்றோரிடம் கோரிக்கை விடுப்பதால் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார் .பெரும்பாலான பாடசாலைகள் ஏதேனுமொரு நன்கொடையை வழங்குமாறு பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார் .பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில், பள்ளிக்கூடங்களில் சேர்த்த பிறகு பெற்றோரிடமிருந்து இலவசக் கல்வி முறையின் கீழ் பாடசாலை நிர்வாகம் நன்கொடைகள் பெறக்கூடாது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதென சுட்டிக்காட்டியிருக்கும் அவர் .பெற்றோரை நன்கொடை வழங்குமாறு வற்புறுத்துவது முற்றிலும் தவறானதெனக் கூறியுள்ளார் . நன்கொடைகளை வழங்குவது தொடர்பாக அழுத்தம் உள்ள பெற்றோர்கள் அமைச்சுக்கு விரைவாக அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதாகவும் பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்த்த பிறகு பெற்றோர்களிடம் எந்தக் கோரிக்கையும் முன் வைக்க முடியாதெனவும் கல்வி அமைச்சு தெரிவித்திருக்கும் நிலையில், நன்கொடை கோரும் பாடசாலைகளுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் பாடசாலைகள் அல்லது ஒருபகுதி அரச மானியத்துடன் இயங்கும் பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கு பாரிய தொகை நன்கொடைகள் அறவிடப்படுவது நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வருகிறது.அதேவேளை அரசாங்க பாடசாலைகளில் சட்டப்படி நன்கொடைகள் அறவிடப்பட முடியாதெனினும் நகர்ப்புறப் பிரபல்யமான பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கு பெற்றோரிடம் பாரிய தொகைகள் அறவிடப்படுவதாக அவ்வப்போது முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு விசாரணைகளும் இடம்பெற்றுள்ளன.இலங்கையின் கல்வித்துறை வரலாற்றில் 1944 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்விக் கொள்கை ஒரு முக்கியமானதெனவும் எத்தனையோ வறிய மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக இன்றுவரை இருந்துவருகின்றது எனவும் மகிழ்ச்சியடையும் அதே தருணத்தில் அந்த இலவசக் கல்வி முறைக்கு முரணானதாக பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பதற்காக பெற்றோரிடம் நன்கொடை அறவிடுவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாததொன்று. அனைவருக்கும் சம வாய்ப்பை வழங்குதல் மற்றும் நீண்டகால நிலையான வளர்ச்சிக்கான வலுவான அடித்தளத்தை நிறுவுதல் என்பதற்கான மனித மூலதனமாகவே கல்வி கருதப்பட்டு இலவசமாக அனைவருக்கும் கல்வியை வழங்கும் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது.அதேவேளை ஆட்சியிலிருந்துவந்த அரசாங்கங்கள் சில புதிய திட்டங்களையும் அவ்வப்போது அறிமுகப்படுத்தி வந்துள்ளன.இலவச பாடநூல் ,இலவச சீருடைத் திட்டம், நவோதயா பாடசாலை மேம்பாட்டுத் திட்டம், இலவச மதிய உணவுத் திட்டம், போக்குவரத்து மானிய திட்டம், தரம் ஐந்து புலமைப் பரிசில் உதவித்தொகை திட்டமென பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு இலவசக் கல்வித் திட்டத்துக்கு வலுவூட்டப்பட்டது.

இலங்கையில் இலவசக் கல்வி முறையின் முக்கிய அம்சங்களுள் , அதன் மேம்பாடு ,கொள்கை வகுப்பாளர்களுக்கு இது தொடர்பாக ஏற்பட்டுள்ள சவால்கள் என்பனவும் உள்ளடங்கும்.அரச கல்வித்துறைக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து ஆறு சதவீதத்தை ஒதுக்கீடு செய்யுமாறு நீண்டகாலமாக வலியுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன .அத்துடன் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பிரபலமான பாடசாலைகளுக்கு இடையில் நிலவும் பௌதிக வளப்பற்றாக்குறையை நீக்கிவிடுமாறும் கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. ஆனால் நடைமுறையில் அரச பாடசாலைகளில் குறிப்பாக நகர்ப்புற பிரபல்ய பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பதென்பது நகரப்புறவாசிகளுக்கு பெரும் சிரமமான விடயம். இதேவேளை குழந்தையொன்று பிறந்த நேரத்திலிருந்தே பாடசாலைகளில் பிள்ளையை சேர்ப்பது தொடர்பாக பெற்றோர் சிந்திக்கவேண்டியிருப்பதாகவும் சேமிக்கத் தொடங்கவேண்டியிருப்பதாகவும் சிலர் சலித்துக்கொள்வதையும் அவதானிக்க முடிகிறது. நகரத்தில் உள்ள பல பிரபல தனியார் பாடசாலைகள் நன்கொடையாக சில லட்சம் ரூபா வரை நன்கொடையாக வசூலிப்பதாக கூறப்படுகிறது.அரச பாடசாலைகளிலும் இந்தப் பிரச்சினை நிலவுவது சட்டவிரோதமான செயற்பாடாகும்.

அதேவேளை பாடசாலை நிர்வாகங்கள் நன்கொடைகளை வசூலிப்பதற்கும் பெற்றோர் என்ன பாடுபட்டாகிலும் பணத்தை செலுத்துவதற்கு முனைவதற்கும் தூண்டுதலாக குறிப்பிட்ட பாடசாலையில் கல்வியின் தரம்.அதன் நற்பெயரென பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும்,பெரும்பாலான பெற்றோர் தங்கள் பிள்ளைகள் கற்கும் பாடசாலையால் நன்கொடையாக வசூலிக்கப்பட்ட தொகை பற்றி வெளியிட முன்வருவதில்லை.தனியார் பாடசாலைகளை பொறுத்தவரை ஆசிரியர்களுக்கான சம்பளம் மற்றும் நிர்வாக செலவினங்களுக்காக அதிக தொகை அறவிடப்படுவதாக கூறுவதை நியாயமானதென்று ஏற்றுக்கொள்ள முடியும் .அத்துடன் வருடாந்தம் மாணவர்களின் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப பௌதிக வளங்களையும் விரிவுபடுத்தவேண்டியுள்ளது. ஆனால் அரச பாடசாலைகளை பொறுத்தவரை அரசாங்கம் கல்விக்கென கணிசமான தொகையை ஒதுக்கீடு செய்துவரும் நிலையில், பெற்றோரிடமிருந்து நன்கொடை அறவிடுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.உலகம் முழுவதும் பின்பற்றப்படும் நவீன கற்பித்தல் , கற்றல் முறைகளைப் பார்த்தால், பாடசாலையொன்றில் நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பிள்ளைகளை சுதந்திரமாக சிந்திக்க ஊக்குவிப்பதும் ஈர்க்கக்கூடியதுமான பாடத்திட்டம் உள்ளதா என்பதைத்தான் பெற்றோர் பார்க்கவேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான நகரப் புறப் பாடசாலைகளுக்கு சிறப்பான , உள்சார் கட்டமைப்புகள், அலங்காரத்துடனான வசதிகள் என்பன காணப்படும் நிலையில், நன்கொடை செலுத்த விருப்பமில்லாத அல்லது இயலாத பெற்றோர் ஒதுக்கி வைக்கப்படும் நிலைமை அரசாங்க பாடசாலைகளில் ஏற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது .

# பொருளாதாரச் சிதைவின் வித்துக்கள்



கலாநிதி அமீர் அலி

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் பொருளாதாரம் இப்போது உள்ளதைப் போன்ற ஒரு தாழ்ந்த நிலையை ஒருபோதும் அடைந்ததில்லை. இது அதன் தாழ்ந்த புள்ளியாக இருக்குமா அல்லது இன்னும் அந்த மட்டத்திற்கு வரவில்லையா ? வெறும் 1.5 பில்லியன் டொலர் வெளிநாட்டு கையிருப்பில் 300 மில்லியன் டொலர் தங்கம் உள்ளது. அந்த கையிருப்பை அதிகரிக்க எந்தவொரு புதிய நடவடிக்கையும் மேற்கொள்ளாவிடின் நான்கு வார இறக்குமதிகளுக்கு பணம் செலுத்திய பிறகு நாடு, நிதி ரீதியாக வங்குரோத்தாகிவிடும் . எரிபொருள் இறக்குமதிக்கு பணம் இல்லாமல், அதன் விலை அதிகரித்து வருகிறது. வீட்டில் சமையல் விரைவில் பலருக்கு ஆடம்பரமாக மாறும்.மேலும் தவிர்க்க முடியாத மற்றும் இடைவிடாத மின்வெட்டுகளால் நாடு உண்மையில் இருண்ட சகாப்தத்தில் மூழ்கிவிடும். சுருக்கமாகச் சொல்வதானால், தற்போதைய ராஜபக்ஷ அரசாங்கத்தைப் போல, எந்த ஒரு அரசாங்கமும், பொருளாதாரத்திற்கு இவ்வளவு சேதத்தை மிகக் குறுகிய காலத்தில் செய்ததில்லை. தொற்றுநோய் இந்த பேரழிவுக்கு பங்களித்த ஒரு காரணியென்பது உண்மை. ஆனால் அது இதற்கு மூலகாரணமல்ல . தொற்றுநோய் இல்லாவிட்டாலும் கூட,பொருளாதாரச் சிதைவு ஒரு வரலாற்று ரீதியாக தயாரிக்கப்பட்ட பெரும்பான்மை அரசியல் நோக்கங்களுடன் இணைந்திருக்கும் இன–தேசிய மேலாதிக்க சித்தாந்தத்தை வரித்துக்கொண்டிருக்கும் ஒரு அரசியல் தலைமையின் கைகளில் இருந்திருக்கும்.

அந்நியச் செலாவணித் தட்டுப்பாடு மூன்று ராஜபக்ஷக்களான கோதாபய ராஜபக்ஷ , மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோரை நட்பு அரசாங்கங்கள் மற்றும் அவற்றின் மத்திய வங்கிகள் மத்தியில் கடன் வழங்குபவர்களைத் தேடுவதற்கும், கடனுக்காகவும் நாணய பரிமாற்றங்களுக்காவும் வேகமாக துரத்துகிறது. அவர்களும் இலங்கை மத்திய வங்கியின் தலைவரும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்குட்பட்ட கடனை அவர்களின் உள்நாட்டில் வளர்த்தெடுக்கப்படும் பரீட்சார்த்தம் அல்லது அபிவிருத்திக்கான மாற்றுப் பாதையில் வெற்றிபெறுவதற்காக தவிர்க்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். 'ஒழுக்கம், நல்லொழுக்கம் மற்றும் சட்டபூர்வமான' சமூகத்திற்குள் 'செழிப்பு மற்றும் சிறப்பை' நோக்கி நாட்டை முன்தள்ள ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று மக்கள் நம்பினர். கோஷங்கள் நடைமுறைக் கொள்கைகளாகவும் செயலாகவும் மாற்றப்படாவிட்டால் அவை கோஷங்களாகவே இருக்கும். இதில், கடந்த இரண்டு வருடங்களாக இந்த ஆட்சியின் சாதனை படுதோல்வியை சந்தித்துள்ளது என்பதை ஜனாதிபதியே பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார். இளைஞர்களும் படித்தவர்களும் தங்கள் எதிர்காலத்தில் நம்பிக்கையை இழக்கும் போது, அவர்கள் பகைமையை நோக்கி இடம்பெயர்வார்கள் அல்லது அதிருப்தியுடன் வீட்டில் இருப்பார்கள். இரண்டு அறிகுறிகளும் தற்போது காணப்படுகின்றன.

எவ்வாறாயினும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியில் படபடப்பு ஏற்பட்டது. ஆட்சியானது இலங்கையைதேரவாத சிங்கள பௌத்த மேலாதிக்க நாடாக மாற்ற வேண்டும் என்ற உறுதியுடன் அதிகாரத்திற்கு வந்தது. 2019 ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் உள்ள ருவன்வெலிசாய பௌத்த பிரதேசத்தில் கோதாபய ராஜபக்ஷ பதவிப்பிரமாணம் செய்த நாள் முதல் சில தினங்களுக்கு முன்னர் அதே பிரதேசத்தில் மகிந்த ராஜபக்ஷ சௌதா ஹிரு சேயாவை வெளியிட்டது வரை அந்த உறுதியை யதார்த்தமாக மாற்றுவதற்கான அவர்களின் முயற்சிகள் மிகவும் வெளிப்படையாகவும் விரிவாகவும் சில சமயங்களில் கவலையளிப்பதாகவும் இருந்தன. ஜனாதிபதி தனது அலுவலகத்தில் ஏனைய மதத் தலைவர்களை தவிர்த்து, பௌத்த பீடாதிபதிகளுடன் வழமையான அமர்வுகளை மேற்கொண்டு, பௌத்த இடிபாடுகளை அடையாளங்கண்டு, அகழ்வாராய்ச்சி செய்து பாதுகாப்பதற்காக பயிற்சி பெற்ற, தகுதி வாய்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களை விட, பௌத்த பிக்குகள் மற்றும் பௌத்த மேலாதிக்கவாதிகளின் தலைமையில் செயலணிப் பிரிவை நியமித்துள்ளார்.

பௌத்த திருவிழாக்கள் மற்றும் பெரஹரா நாட்களில் தொற்றுநோய் முடக்க விதிகள் தன்னிச்சையாக தளர்த்தப்பட்டிருந்தது. ஒரே நாடு ஒரே சட்டம் செயலணிக் குழுவின் தலைவராக ஒரு பிக்குவை தேர்ந்தெடுப்பதும், பல்கலைக்கழகங்களின் வேந்தர்களாக கேள்விக்குரிய ஆற்றல் கொண்ட பௌத்த பிக்குகளை நியமிப்பதும் இந்த விடயத்தை நிரூபிப்பதற்கான தெளிவான எடுத்துக்காட்டுகள். சாராம்சத்தில், தற்போதைய ஆட்சியானது சங்கத்தை இன்னொரு அரசிதழ் ஆக்கியுள்ளது. புத்தபெருமான் போதித்த எளிமை, ஆடம்பரங்களைத் தவிர்ப்பது போன்ற கொள்கைகளுக்கு என்ன நடந்தது?

அரசியலமைப்பு ஏற்கனவே பௌத்த மதத்திற்கு முதன்மையான இடத்தை வழங்கியுள்ளது. அதேவேளை பௌத்தத்தை அரச மதமாக கோரும் சக்திவாய்ந்த பிரிவு இன்னும் பௌத்த சமூகத்திற்குள் உள்ளது. புதிய அரசியலமைப்பு வரைவை காண தேசம் ஆவலுடன் காத்திருக்கிறது. மொத்தத்தில், சிங்கள–பௌத்தர்கள் இன–மத போதை மாயத்தோற்றத்தில் இருக்கும் வரை, ஆட்சி நீடித்து நிலைத்திருக்கும் என்று ராஜபக்ஷக்களும் அவர்களது அதிகாரக் கூட்டமைப்பும் நம்புவதாகத் தோன்றுகிறது. ஜே.வி.பி./தேசிய மக்கள் சக்தி உட்பட தற்போதுள்ள எதிர்க்கட்சிகள் எவற்றுக்கும் பௌத்தத்தின் அரசியல் மேலாதிக்கம் தொடர்பான விடயத்தில் முரண்பட்ட நிலைப்பாட்டை எடுக்கத் துணிவு உள்ளதா என்பது சந்தேகமே. இந்த வழியில் குரல் கொடுப்பதில் உறுதியாக இருந்தவர் மறைந்த மங்கள சமரவீர ஆவார். அவரது வெளிப்படையான பேச்சுக்காக சங்க உறுப்பினர்களால் அவர் எவ்வாறு தண்டிக்கப்பட்டார் என்பது பொதுவாக அறியப்பட்டதாகவுள்ளது.

சுதந்திர இலங்கையில் பௌத்தத்தின் அரசியல்மயமாக்கல் ராஜபக்ஷ ஆட்சிக்கு பல தசாப்தங்களுக்கு முன்னதாகவே உள்ளது. உண்மையில், வித்யாலங்கார பிரிவெனாவைச் சேர்ந்த பிக்குகள் இடதுசாரிக் கட்சிகளின் பிரசார மேடைகளில் இருந்து ஐ.தே.க. தலைவர்களுக்கு பெரும் ஏமாற்றம் அளிக்கும் வகையில் வாக்காளர்களிடம் உரையாற்றிய 1950 காலப்பகுதிக்கு இது செல்கிறது. இருப்பினும், பௌத்தத்தின் அரசியல் மதிப்பும் வலிமையும் 1956 இல் எஸ்.டபிள்யூ .ஆர். டி. ஆல் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தப்பட்டது. ஆச்சரியப்படும் விதமாக, தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிசத்திற்கு எதிரான அமெரிக்கப் போரில் பௌத்தத்தை கருவியாக்க சி. ஐ. ஏ. கூட கற்றுக்கொண்டது அவரது பிரசாரத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது. 1950 களில் ஆரம்பித்தது. அதன் பின்னர் ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றியை அளித்தது.

இங்கு வாதமானது பௌத்தத்திற்கு எதிரானது அல்ல .மாறாக அதன் அரசியல்மயமாக்கலுக்கு எதிரானது. உண்மையில், எந்தவொரு மதத்தையும் அரசியலாக்குவது எந்தவொரு சமூகத்தின் மற்றும் குறிப்பாக பன்மை சமூகங்களின் வாழ்க்கைக்கு தீங்கு விளைவிக்கும். ஐரோப்பாவும் மேற்குலகும் இந்த உண்மையை வெகு காலத்திற்கு முன்பே உணர்ந்து அரசையும் திருச்சபையையும் தனித்தனியாக வைத்திருந்தன. சிங்கப்பூர் ஒரு மதச்சார்பற்ற தன்மையுடன் பிறந்தது. இரண்டும் செழித்து வளர்கின்றன . அந்த பன்மைத்தன்மையின் ஒரு கூறு மற்றவற்றை விட அரசால் அதிக முன்னுரிமையுடன் நடத்தப்படும்போது வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதற்கு வழி இல்லை. சமூக அடித்தளமானது பிளவுகள் மற்றும் பாகுபாடுகளால் சிதைந்து கொண்டிருக்கும் போது, அதன் மீது கட்டப்பட்ட அதிஉயர்வான கட்டமைப்பு எவ்வாறு நிலையானதாக இருக்கும்?

அடிப்படையில், ஒரு பொருளாதாரம் மக்களுக்காக மக்களால் கட்டமைக்கப்படுகிறது. அவர்களின் கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்ட ஒத்துழைப்பினாலேயே பொருளாதாரம் அதன் முழுத் திறனையும் அடைகிறது. பாடநூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற உள்ளீடுகள் அனைத்தும் இரண்டாம் நிலையே . மக்களின் முயற்சியே முதன்மையான உள்ளீடு. மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் ஏனைய மூன்றில் இரண்டு பங்கினரைக் காட்டிலும் குறைவாகவே அரசால் நடத்தப்பட்டு, அதனால் விரக்தியடைந்தவர்களாகவும், உறுதியற்றவர்களாகவும், வளர்ச்சிக்கான அரசின் அழைப்புக்கு ஒத்துழைக்காதவர்களாகவும் இருக்கும் போது, அந்தப் பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் ஒத்துழைப்பின் அளவு வெளிப்படையாகவே தரம் குறைந்ததாகவிருக்கும் . சில தற்செயலான சூழ்நிலைகள் காரணமாக சில சமயங்களில் அவ்வப்போது செல்வச் செழிப்பு இருக்கலாம். ஆனால் உகந்தளவிலான நிலையான வளர்ச்சி சாத்தியமில்லை. பொருளாதாரம் செழிப்பையும் சிறப்பையும் வழங்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? தற்போதைய ஆட்சியின் கீழ் அதன் விருப்பமான மூன்றில் இரண்டு பங்கு கூட அதன் பொருளாதார எதிர்காலத்தில் நம்பிக்கை இழக்கத் தொடங்கியுள்ளது. எனவே தற்போதைய மந்தநிலையில் இருந்து வெளியில் உள்ள உலகம் மீண்டு வந்தாலும் இலங்கையானது நெருக்கடி நிலையிலேயே இருக்கும் என்பதே இக்கட்டுரையின் கருத்து. பொருளாதார நெருக்கடியின் உண்மையான வித்துக்கள் வேறு இடங்களில் நாட்டின் சமூக–அரசியல் அடித்தளத்தில் புதைந்துள்ளன. எனவே, சிதைவடைந்துபோவதை நிறுத்தவும், ஜனநாயகத்தை மீட்டெடுக்கவும், பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுக்கவும் புதிய மதச்சார்பற்ற அரசியலமைப்பு மற்றும் மதத்தின் தனியார்மயமாக்கல் ஆகியவை இன்றியமையாததாகிறது.

கொழும்பு டெலிகிராப்

> ‘உண்மையில், எந்தவொரு மதத்தையும் அரசியலாக்குவது எந்தவொரு சமூகத்தின் மற்றும் குறிப்பாக பன்மை சமூகங்களின் வாழ்க்கைக்கு தீங்கு விளைவிக்கும். ஐரோப்பாவும் மேற்குலகும் இந்த உண்மையை வெகு காலத்திற்கு முன்பே உணர்ந்து அரசையும் திருச்சபையையும் தனித்தனியாக வைத்திருந்தன. சிங்கப்பூர் ஒரு மதச்சார்பற்ற தன்மையுடன் பிறந்தது. இரண்டும் செழித்து வளர்கின்றன . அந்த பன்மைத்தன்மையின் ஒரு கூறு மற்றவற்றை விட அரசால் அதிக முன்னுரிமையுடன் நடத்தப்படும்போது வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதற்கு வழி இல்லை’



# தொழில் முயற்சியாளர்களின் தரத்தை உயர்த்துவதற்கு உதவுங்கள்

### ஜெர்மன் தூதரக அதிகாரிகளிடம் மேலதிக அரசாங்க அதிபர் கோரிக்கை

யாழ் .மாவட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் தொழில் தரத்தை ஊக்குவிப் பதற்கு உதவி செய்யுமாறு யாழ். மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தூதரக அதிகாரிக ளிடம் கோரிக்கை விடுத்தார்.

யாழ் .சுன்னாகம் பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந் தினர் விடுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற தூதரக அதிகாரிகள் மற்றும் தொழில் துறை சார்ந்தவர்கள் பங்கு பற்றிய கலந்துரையாடலிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் .மாவட்டத்தில் 7,313 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் காணப்படுகின்றனர்.

அவர்களில் 2 ஆயிரத்து 834 பெண் தொழில் முயற்சி யாளர்கள் காணப்படுவதுடன் 307 பெண் தலைமை தாங்கும் தொழில் முயற்சியாளர் கள் காணப்படுகின்றனர்.

போட்டி மிகு வர்த்தக துறையில் தமது உற்பத்தியை சிறந்த முறையில் பாவனை யாளர்களுக்கு வழங்குவதற் கான வேலைத்திட்டங்களை ஜெர்மன் அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக சிறிய மற்றும் நடுத் தர உற்பத்தியாளர்களை நாம் அடையாளப்படுத்தி வைத் துள்ளோம் அவர்களை மேலும் விருத்தி செய்ய உதவுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் இலங்கைக் கான ஜெர்மனிய தூதுவர் ஹோல்கர் ஸுபேர்ட், வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ,யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப் பிள்ளை மகேசன், ஜெர்மன் தூதரக அதிகாரிகள் மற்றும் தொழில் துறை சார்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (75)

# நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான இணைந்த செயற்பாடு வரவேற்கத்தக்கது

### -அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு-



நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாக எதிர்காலத்தில் இந்து சமய, கலாசார அலு வல்கள் திணைக்களத்தினதும் யாழ். மாநகர சபையினதும் இணைந்த செயற்பாட்டுக் கான முன்மொழிபு வரவேற் கத்தக்கது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தர் தெரி வித்துள்ளார்.

இந்து சமய, கலாசார அலு வல்கள் திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக, குறிப்பாக இந்து ஆலயங்களின் அபிவிருத்தி மற்றும் பரிபாலனச் செயற் பாடுகளைச் செழுமைப்ப டுத்துவதற்கான வழிமுறைகள், நாவலர் கலா சார மண்டபத்தின் புனரைமைப்பு மற்றும் இந்து சமய, கலாச ார அலுவல்கள் திணைக்களம் மற் றும் யாழ். மாநகர சபை இணைந்து கூட்டு முயற் சியில் நாவலர் கலாசார மண் டபம் தொடர் பான பணிகளை முன்னெடுத்தல் போன்ற விடயங் கள் தொடர்பாக, புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்களுக் கான அமைச்சர், பிரதமர் மகிந்த ராஜபக்சவின் இந்து மத விவ காரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி இராமச் சந்திரக் குருக்கள் பாபு சர்மா, இந்து சமய, கலாச ார அலுவல்கள் திணைக்களத் தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வ ரன் , அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவின் அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சருட னான சந்திப்பு ஒன்றினை முன்னெடுத்தி ருந்தனர். இந்த வேளையிலே நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப் பட்ட வேளையில் மேற்படி விடயத்தினைத் தெரிவித்தார்.

மேலும், இந்த விடயம் தொடர்பாகக் கூறுகையில், இந்து சமய, கலாசார அலு வல்கள் திணைக்களத்திற்கு முழு உரிமையுடைய நாவ லர் கலாசார மண்டபத்தைத் தற்போது யாழ்.மாநகர சபை நிர்வாகமே பராமரித்து வரு கின்ற நிலையில், சில முரன் பாடுகள் நிலவிய போதும் அதனை இரு நிர்வாகமும் இணைந்து பராமரிப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தைப் பெரிதும் வர வேற்கிறேன் என்றார்.

எதிர்வரும் ஆண்டு நாவ லரின் இருநூறாவது பிறந்த ஆண்டு. இந்த ஆண்டிலே புதுப்பொலிவோடு கூடியதா கச் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றும் அதற்குக் கிடைத்திருக்கின்ற இந்த வாய்ப்பினைச் சிறந்த முறை யிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட் டார்.

மேலும், சைவ சமய மறுமலர்ச்சியின் தந்தை யான நாவலர் பெருமா னுக்கு இப்படி ஒரு விழா எடுப்பதற்கும் வரப்போ கின்ற ஆண்டினை நாவலர் ஆண்டாகப் பிரகடனம் செய்வதற்கும் தயாராகவுள்ள நாட்டின் பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள் ளோம்.இந்தக் கட்டத்தில் நிலையறிந்து கூட்டாக இணைந்து செயற்படுவதற் கான தீர்மானத்திற்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கும் யாழ். மாநகர சபைக்கும் எனது பாராட்டுகள் என்றார்.


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## PHYSICAL EDUCATION UNIT
## WALK -IN – INTERVIEW

Walk in interview for the recruitment of the Visiting Instructor for the following fields will be held on 09.12.2021 at 9.30 a.m at the Board Room of the University of Jaffna.

**Jaffna**
**Visiting Instructor in Chess- Men / Chess- Women / Karate / Rugby/ Wrestling**

**Kilinochchi Premises**
**Visiting Instructor in Badminton / Chess / Karate / Netball / Table Tennis/ Taekwondo/ Volleyball / Wrestling / Weightlifting**

Candidates who have the required qualifications are invited for a Walk in Interview, with self-prepared application for the above post.

**Qualification**

a) A graduate of a recognized university who has been a member of a National Team / National Champion or other equivalent attain ments in the field of sports with the prior approval of the UGC

OR

b) A candidate who has passed the G.C.E (A/L) Examination in one and the same sitting and who has represented Sri Lanka in any sport at International Level with five (05) years experience in such sports

OR

c) G.C.E (A/L) Examination in at least 03 subjects in one and the same sitting and a Diploma in Sports of not less than 09 months duration with five (05) years experience in organizing and imple menting sports programmes.

| Post | Salary |
|---|---|
| Visiting Instructor | Rs. 750/- per hour |

**Note:** - This appointment will be 1½ hours per day and two days per week. Total hours of Appointment will be 1½ hours x 2 days x 4 weeks x 10 months = 120 hours.

Interested candidates with the required qualifications are expec ted to be present for the interview with relevant certificates, NIC and self- prepared application Copy of the relevant certificates and NIC should be attached with the self-prepared application.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
01.12.2021



# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

**FACULTY OF ENGINEERING**

Senior Professor/Professor **of Computer Engineering/ Electrical and Electronic Engineering/ Civil Engineering/ Mechanical & Process Engineering.**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in ***Civil Engineering/Computer Engineering/ Electrical and Electronic Engineering/ **Mechanical & Process Engineering/ ***Engineering Mathematics/ ****Complementary Studies.**

* For the positions in **Civil Engineering** special consideration will be given to those who have specialized or willing to specialize in Water Resource/ Environmental Engi neering.

** For the positions in **Mechanical & Process Engineering** special consideration will be given to those who are sound knowledge and skills in Machine Design, Ther mal Engineering, Compressive Fluid Mechanics, Automobile Engineering, Me chatronics, Manufacturing Process Engineering, Energy Systems Engineering and Material Science Engineering.

*** For the positions in **Engineering Mathematics**, special consideration will be given to those who are holding first degree in Engineering and have specialized or willing to specialize in Engineering Mathematics.

**** For the positions in **Complementary Studies**, special consideration will be given to those who are sound knowledge and skills in Business Law, Marketing, Management (Financial + Resource + Entrepreneurial), Economic development and Advanced written English

**FACULTY OF AGRICULTURE**

Senior Professor/Professor of **Agronomy/ Agricultural Biology/ Agricultural Chemistry / Animal Science / Agricultural Economics / Agricultural Engineering**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Unconfirmed) / Lecturer (Probationary) in **Agronomy/ Agricultural Biology / Agricultural Chemistry / Animal Science / #Agricultural Economics / ##Agricultural Engineering.**

**#For the Position in Agricultural Economics**
Preference will be given to those who have Specialized in Agricultural Extension or willing to specialize in Agricultural Extension.

**##For the Position in Agricultural Engineering**
Preference will be given to those who have specialized in Agricultural Farm Machinery or willing to specialize in Agricultural Farm Machinery.

Those who wish to apply are strongly advised to visit our University Website **www.jfn.ac.lk** for all the relevant details.

**Closing date:**
Applications should reach us on or before the date given below:

**Post of Senior Professor/Professor - 31.01.2022**

**Other posts - 31.12.2021**

Application forms and other details will be available in the University web site **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the de posit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank slip.** The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications and self-evaluation with supportive documents for the **Post of Senior Professor/Professor** shall be sent to the **Vice-Chancellor, University of Jaffna, Sri Lanka** as required by the University Grants Commission Circulars No. 5/2015, 5/2015 (i) (for Senior Professor), University Grants Commission Circulars 916, 4/2014 and Establishments Circular No. 4/2010 (for Professor), (see http://www.jfn.ac.lk/index.php/circular/) with a covering letter.

Perfected applications for the **other posts** shall be sent to the **Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Application and referees reports should be in the relevant format. Illegible and Incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**30.11.2021**

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**

# ஊடகவியலாளரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய பொலிஸ் உத்தியோகஸ்தர்

யாழ்ப்பாணம்- பருத்தித்துறை பொலிஸ் உத்தியோகஸ்தர்களால் யாழில் இருந்து வெளியாகும் பிராந்திய பத்திரிகை ஒன்றின் ஊடகவியலாளர் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறையை சேர்ந்த ஜெ. கலக்சன் என்பவரையே பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தர் துப்பாக்கியை காண்பித்து மிரட்டி , அநாகரிகமாகவும் பேசியும் உள்ளார்.

அது தொடர்பில் ஊடகவியலாளர் , பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் முறையிட சென்ற போது , பொலிஸ் நிலையத்தினுள் அத்துமீறி நுழைந்து தமது கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்ய போவதாக மிரட்டி , பொறுப்பதிகாரியை சந்திக்க விடாது தடுத்தும் உள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பருத்தித்துறை நீதிமன்றுக்கு அருகில் உள்ள தேநீர் கடை உரிமையாளருக்கும் , பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தருக்கும் இடையில் , கொடுக்கல் வாங்கல் காரணமாக முரண்பாடு நிலவி வந்துள்ளது.

அந்நிலையில் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்று பாதுகாப்பு கடமையில் குறித்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஈடுபட்டிருந்த போது , அருகில் இருந்த தேநீர் கடைக்கு வருபவர்கள் கடைக்கு அருகில், தமது வாகனங்களை நிறுத்த முற்பட்ட போது, அவ்விடத்தில் வாகனங்களை நிறுத்த முடியாது எனவும், நீதிமன்ற உத்தரவு என்றும், கடைக்கு வருபவர்களை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்தார்.

அந்நிலையில் கடைக்கு வந்த நபர் ஒருவர் கடைக்கு முன்பாக தனது, மோட்டார் சைக்கிளை விட்டு விட்டு தேநீர் அருந்த உள்ளே சென்ற போது , அவரிடம் வந்து மோட்டார் சைக்கிளை எடு என பொலிஸ் உத்தியோகஸ்தர் அநாகரிகமாக பேசி நடந்துகொண்டுள்ளார்.

அதன் போது குறித்த நபரும் , இவ்விடத்தில் வாகனம் நிறுத்த தடை என எவ்வித அறிவித்தலும் இல்லை. வழமையாக இவ்விடத்தில் நாங்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்துகின்றோம். இன்றைக்கு திடீரென வந்து நிறுத்த வேண்டாம் என அநாகரிகமாக என்னிடம் பேச முடியாது என கூறியுள்ளார்.

அதனை அடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகஸ்தர் அந்நபர் , தனது கடமைக்கு இடையூறு விளைவித்தார் என கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று தடுத்து வைத்தார்.

நீதிமன்ற காவல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் , தனது கடமைகளை கைவிட்டு இதனை செய்துள்ளார்.

அதன் பின்னர், சிறிது நேரம் பொலிஸ் நிலையத்தில் அவரை தடுத்து வைத்த பின்னர் , தாங்கள் பொலிஸ் பிணையில் விடுவிப்பதாக கூறி , அவரை விடுவித்துள்ளனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் அறிந்து கொண்ட ஊடகவியலாளர் , அது தொடர்பில் மேலும் அறிந்து கொள்வதற்காக , அக்கடைக்கு சென்றுள்ளார்.

அதன்போது ஊடகவியலாளரும் கடைக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு கடைக்காரரிடம் சம்பவம் தொடர்பில் விசாரிக்க முற்பட்ட போது , நீதிமன்ற காவல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் , அங்கிருந்து வந்து ஊடகவியலாளருடன் முரண்பட முனைந்துள்ளார்.

அதன் போது , தான் ஊடகவியலாளர் என அடையாளப்படுத்திய போது , மோட்டார் சைக்கிளை இவ்விடத்தில் நிறுத்த வேண்டாம் என நீதிமன்ற உத்தரவு என கூறியுள்ளார். அதற்கு , ஊடகவியலாளர் எங்கே மோட்டார் சைக்கிளை நிறுத்துவது என கேட்ட போது , பொலிஸ் நிலையத்திற்குள் நிறுத்துங்கள் என கூறியுள்ளார்.

அதனை அடுத்து அவர் பொலிஸ் நிலையத்திற்குள் மோட்டார் சைக்கிளை கொண்டு சென்று நிறுத்திய போது , கடைக்காரனுடன் கதைக்க வேண்டாம் , இங்கிருந்து செல்லுங்கள் என அச்சுறுத்தும் வகையில் கூறியுள்ளார்.

அதற்கு ஊடகவியலாளர் செவி சாய்க்காது சென்ற போது , பொலிஸ் நிலையத்திற்குள் அத்துமீறி நுழைந்து பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்வேன் என மிரட்டியுள்ளார்.

அதற்கு ஊடகவியலாளர் தான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை சந்திக்கிறேன் என கூறிய போது , தனது துப்பாக்கியை எடுத்து ஊடகவியலாளரை நோக்கி நீட்டி யாருக்கும் பயப்பட மாட்டேன், பொலிஸ் நிலையத்திற்குள் அத்துமீறி நுழைந்தவரை சுட்டேன் என கூறுவேன் என மிரட்டியுள்ளார்.

அதன் போது அங்கு வந்த மற்றைய பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் , ஊடகவியலாளரை மிரட்டிய சக பொலிஸ் உத்தியோகஸ்தரை சமரசப்படுத்தியதுடன் , ஊடகவியலாளரையும் அங்கிருந்து செல்லுமாறும் , பொறுப்பதிகாரி காங்கேசன்துறை சென்றுள்ளதாகவும் , அவர் மாலை வந்த பின்னர் வந்து கதைக்குமாறு கூறி அனுப்பி வைத்துள்ளனர்.

(40)


பால்நிலை வன்முறைக்கெதிரான
16 நாள் செயற்பாடு - 2021
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
"பெண்கள் பாதுகாப்பை உணர வைப்பது ஒவ்வொருவரினதும் கடமை. அனைவரும் இணைந்து பாதுகாப்பான சமத்துவமான சமூகத்தை உருவாக்குவோம்."
16 2021
யாழ் சமூக செயற்பாட்டு மையம்


# சாவகச்சேரியில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனாத் தொற்றாளர்கள்

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்கள் மீண்டும் அதிகரித்து வருவதாக சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்தவகையில் நவம்பர் மாதத்தில் மாத்திரம் தென்மராட்சிப் பிரதேசத்தில் 199 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன்;ஏழு கொரோனா மரணங்களும் பிரதேசத்தில் பதிவாகியிருப்பதாக சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.-(13)

# மன்னார் மாவட்டத்தில் மழையினால் நெற்செய்கை பாதிப்பு



நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்த அடை மழையினால் 2021/22 பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள சுமார் 17 ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதாக மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.மரின் குமார் தெரிவித்துள்ளார்.

பலத்த மழை மற்றும் வெள்ளத்தினால் ஏற்பட்ட பயிர் அழிவு தொடர்பில் உதவி ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தில் 2021/22 காலபோக நெற்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட 13 கமநல சேவைகள் நிலையங்களின் கீழும் இதுவரை சுமார் 33 ஆயிரத்து 994 ஏக்கர் வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் விதைப்புக்காக தயார்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்த அடை மழை மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 17 ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 5 ஆயிரத்து 555 ஏக்கர், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 400 ஏக்கர், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 345 ஏக்கர், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 825 ஏக்கர், மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 42 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதைத் தவிர செய்கை பண்ணப்பட்டுள்ள மரக்கறிகள் மற்றும் ஏனைய உணவுப் பயிர்களுக்கும் மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் எமது கமக்காரர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வெள்ள நீர் தற்போது வடிந்தோடி வருகின்றது. எனினும் பயிர் அழிவு தொடர்பில் எமது உத்தியோகத்தர்களால் தகவல் திரட்டப்படுவதுடன் பயிர் சேத மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம் என்றார்.

(36)

# பாராளுமன்ற உறுப்பினரால் விளையாட்டு கழகங்களுக்கு பொருட்கள் கையளிப்பு



பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவனின் 2021 பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 08 விளையாட்டுக் கழகங்களுக்கு 50,000 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சத்தியசுதர்ஷன் , கலாநிதி சுரேன்ராகவனின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் இந்த விளையாட்டு உபகரணங்களை விளையாட்டுக் கழக உறுப்பினர்களிடம் கையளித்தனர்.

# சாவகச்சேரி நகரசபையின் வரவு – செலவுத்திட்டம் நிறைவேற்றம்

சாவகச்சேரி நகரசபையின் 2022ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.


நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பு அமர்வில் சபையில் கலந்து கொண்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, சுதந்திரக்கட்சி,பெரமுன உறுப்பினர்களின் ஆதரவுடன் வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

18உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி நகர சபையில் வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக வாக்கெடுப்பு அமர்வில் 14உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிலையில் அனைவருமே தமது ஆதரவினைத் தெரிவித்திருந்தனர்.

அதேசமயம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் மூன்று பேர் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ஒருவரும் குறித்த அமர்வில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சபையின் இறுதி வரவு-செலவுத் திட்டத்திற்கு உறுப்பினர்கள் தமது பூரண ஆதரவினை வழங்கியமைக்கு தவிசாளர் தனது நன்றிகளைத் தெரிவித்திருந்தார். -(13)

# நல்லூர் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது



யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

நல்லூர் கோவில் வீதியில் உள்ள ஒரு வீட்டில் மதிய உணவு தயாரித்துக்கொண்டிருந்த போது அடுப்பு எரிவதனை அவதானித்த வீட்டு உரிமையாளர் வெளியில் ஓடிச் சென்று முன்னால் இருந்த வர்த்தக நிலையத்தினரை அழைத்துள்ளார்.

இதன்போது உடனடியாக ஓடிச் சென்ற வர்த்தக நிலையத்தினர் எரிவாயு சிலிண்டரை அகற்றி தீயை அணைத்தமையினால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படாது தடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கை முழுவதும் எரிவாயு அடுப்புகள், எரிவாயு சிலிண்டர்கள் வெடித்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையிலேயே நல்லூர் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் பதிவாகியுள்ளமை

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகத்தால் போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகத்தினால் பாடசாலை மட்டத்திலும்,பாடசாலைக்கு வெளியேயும் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பிரிவு 1(10-12 வயது), பிரிவு 02-(13-14 வயது) ,பிரிவு 03-(15-30வயது) ஆகிய மட்டங்களில் கவிதை,கட்டுரை, சிறுகதைப் போட்டி, சிறந்த வீட்டு நூலகம் மற்றும் சிறந்த வீட்டுத்தோட்டப் போட்டிகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தங்களது பெயர் விபரங்களை சாவகச்சேரி பொது நூலகத்தில் வழங்கி போட்டிக்கான நிபந்தனைகளையும் பார்வையிட முடியும்.அத்துடன் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இலவச நூலக அங்கத்துவமும் நூலகத்தால் வழங்கப்படுவதனால் வாசகர்கள் இலவச நூலக அங்கத்துவத்தைப் பெற்று பயனடையுமாறும் நூலகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்-(13)

# பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டக் கூட்டம்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட கூட்டம் நேற்று முற்பகல் சபை தவிசாளர் த.ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஆறு கட்சிகளைச் சேர்ந்த 31 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் த.தே.கூ வின் சுதாகர், த.தே.ம.முவின் மேரிகொல்டா மற்றும் கிருசாந்தி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் இராமநாதன் ஆகிய நான்கு உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளிக்காத நிலையில் 27 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

(44)

# காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பஸ்தர் உயிரிழப்பு

காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மூன்றாம் கட்டை, துன்னாலை, கரவெட்டியைச் சேர்ந்த தெய்வகடாட்சம் ஜெயசீலன் (வயது - 53) என்பவராவார்.

காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நெல்லியடி பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.(44)

# ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடுவோரை ஆளுநர் எச்சரித்தால் நிலைமை மோசமாகும்

## -தமிழ்த் தேசியக் கட்சி தலைவர் ஸ்ரீகாந்தா -

காணி ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் வடமாகாண ஆளுநர் எச்சரித்திருப்பாரானால் இது நீடித்துக் கொண்டிருக்கும் காணி அபகரிப்புப் பிரச்சினையை மேலும் சிக்கல் அடைய வைத்து பாரிய போராட்டங்கள் மேற்கொள்ளப்படக் கூடிய நிலைமையை ஏற்படுத்திவிடும் என்று எச்சரிக்கை விடுக்க விரும்புகின்றோம் என தமிழ்த் தேசியக் கட்சி தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

ஆளுநர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். பிறப்பால் தமிழர். தகைமைகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர். உணர்வுபூர்வமான விவகாரங்களில் வடக்கு மக்களின் மனங்களை காயப்படுத்தாமலும் கோபப்படுத்தாமலும் வெல்வதற்கு அவர் முன்வர வேண்டும் என்பதே எமது ஒரே ஒரு வேண்டுகோள் எனவும் அவர் கூறியுள்ளார். இது தொடர்பில் ஸ்ரீகாந்தா நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கில் மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியான காணி அளவீடுகளுக்கு தொடர்ந்தும் இடையூறு விளைவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்ட காணி அளவீடுகளுக்கு எதிராக சம்பந்தப்பட்ட மக்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் இணைந்து எழுப்பியிருந்த எதிர்ப்புக் குரல்களின் ஓர் அங்கமாகவே மாதகலில் காட்டப்பட்ட எதிர்ப்பும் அமைந்துள்ளது.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுவிட்டது என்று இலங்கை அரசாங்கம் பகிரங்கமாக பிரகடனப்படுத்தி 12 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட பின்னரும், யுத்தம் நிகழ்ந்திருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களில் படைத் தரப்பின் பிரசன்னம் என்பது யுத்த காலத்தைப் போலவே தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றது. பல்வேறு படைத்தளங்களும் மேலும் விஸ்தரிக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் வடக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் உள்ள கடற்படை முகாம்களும் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வந்துள்ளன.

இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து இலங்கையில் கள்ளக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுவதை தடுப்பது என்ற பெயரில் 1957 ல் காரைநகரில் நிறுவப்பட்ட கடற்படைத்தளம் தொடர்ந்து விஸ்தரிக்கப்பட்டு ஓர் பாரிய தளமாக நிலைத்து நிற்கையிலும் கூட, இந்த விஸ்தரிப்புக்கள் தொடர்கின்றன. இன்னுமோர் பாரிய கடற்படைத் தளம் காங்கேசன்துறையிலும் இருக்கின்றது. ஆயினும், மாதகலில் உள்ள கடற்படை முகாமின் தேவைக்காக தனியார் காணி ஒன்றினை சுவீகரிக்கும் திட்டத்துடன் முன்னெடுக்கப்பட்ட அளவீட்டு நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இப்போது வட மாகாண ஆளுநரால் விடுக்கப்பட்டிருக்கும் சட்ட நடவடிக்கை தொடர்பான எச்சரிக்கை, நீடித்துக் கொண்டிருக்கும் காணி அபகரிப்புப் பிரச்சினையை மேலும் சிக்கல் அடைய வைத்து பாரிய போராட்டங்கள் மேற்கொள்ளப்படக் கூடிய நிலைமையை ஏற்படுத்திவிடும் என்று எச்சரிக்கை விடுக்க விரும்புகின்றோம். தம்மை பாதிக்கும் எந்தவொரு அரசாங்க நடவடிக்கைக்கும் எதிராக சமூகமட்டத்தில் எவரும் சட்டத்திற்கு அமைவாக எதிர்ப்பு தெரிவிக்க முடியும். அரசியல் சாசனத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் இந்த உரிமை நீதி மன்றங்களினாலும் பாதுகாக்கப்படுகின்றது.

மாதகல் உட்பட வடக்கில் தொடரும் காணி அபகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த உரிமையின் அடிப்படையிலேயே எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

வடக்கை பொறுத்த மட்டில் இது ஒன்றும் புதிய விடயமல்ல, புதிய ஆளுநர் வடக்கிற்கு வருவதற்கு முன்பிருந்தே நிலை கொண்டு நீடித்து நிற்கும் விவகாரம்.

இந்தப் பிரச்சினையில் அதிகார பூர்வமாக தலையிடுவதற்கு சட்டத்தின் கீழ் ஆளுநருக்கு இடமில்லை. தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களோடு வட மாகாண சபை இயங்க முடியாமல் ஸ்தம்பிக்க வைக்கப்பட்டிருக்கும் நிலையில், அதன் சகல அதிகாரங்களையும் கையாளும் ஆளுநருக்கு காணி மற்றும் பொலீஸ் துறை தொடர்பான எந்த அதிகாரமும் கிடையாது. அரசியல் சாசனத்தின் 13ம் திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்குரிய காணி மற்றும் பொலீஸ் துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் இன்னமும் பகிரப்பட்டிராத நிலையில், அந்த அதிகாரங்கள் எவையும் ஆளுநருக்கு கிடையாது. மாறாக, இந்த அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடமே உள்ளன. இது தான் யதார்த்தம்.


நிலைமை இப்படி இருக்கையில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக ஆளுநர் எச்சரிப்பது சிறுபிள்ளைத்தனமானது. பதவி ஏற்ற கையோடு வடக்கில் வாள் வெட்டுக் குழுக்களை அடக்கப் போவதாக ஆளுநர் அறிவித்த போது, அது நல்ல நிலைப்பாடாக இருந்தாலும், அது தொடர்பில் அவருக்கு அதிகாரம் இல்லை என்பதை அப்போது நாம் சுட்டிக்காட்ட விரும்பியிருக்கவில்லை. ஏனெனில் பதவி ஏற்றுக்கொண்ட நிலையில் எதிர் மறையான கருத்தோடு அவரை வரவேற்பது அரசியல் நாகரீகம் அல்ல என்றே நாம் கருதினோம். பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு இராஜ்ஜியத்தை ஆள்வது போன்ற கனவுகள் கலைவது பொதுவாக சகலருக்கும் நன்மையானது.

காணி அபகரிப்புக்கு எதிரான நடவடிக்கைகள் சம்பந்தமாக சட்டம் பாய வேண்டுமானால் கொழும்பிலிருந்து தான் அது ஏவப்பட வேண்டும். நெருக்கடிக்கு ஆளாகியிருக்கும் அரசாங்கம், எவர் தூண்டினாலும் இன்றைய சூழ்நிலையில் அதனை தவிர்க்கவே விரும்பும் என்பது எமது கணிப்பு. மாறாக சட்ட நடவடிக்கைகள் தொடுக்கப்படுமானால், சிறு எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பதிலாக பாரிய போராட்டங்களுக்கே அவை அடிகோலும். ஆளுநர் ஜீவன் தியாகராசா சட்டத்தின் ஆட்சி தொடர்பில் கரிசனை காட்டும் அதே வேளையில் பொது மக்களுக்கு எதிராக பொல்லுகளோடும் மிரட்டல்களோடும் அன்றைய தினம் மாதகலில் அரங்கேற்றப்பட்ட சட்ட விரோத சம்பவங்கள் பற்றியும் தமது கவனத்தை செலுத்த வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

ஆளுநர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். பிறப்பால் தமிழர். தகைமைகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர். உணர்வுபூர்வமான விவகாரங்களில் வடக்கு மக்களின் மனங்களை காயப்படுத்தாமலும் கோபப்படுத்தாமலும் வெல்வதற்கு அவர் முன்வர வேண்டும் என்பதே எமது ஒரே ஒரு வேண்டுகோள் என்றுள்ளது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்...
27 • 02 • 1943



விண்ணில்...
13 • 12 • 2020

### கார்த்திகேசு சுப்பிரமணியம்

(மணிப் பரியாரியார்) ஆயுள்வேத வைத்தியர்

திதி : சதுர்த்தசி

ஆண்டொன்று சென்றது! அழுகை போய் அன்பு பெருகிறது
அருகிருந்து நீங்கள் அறிவுரை சொல்வது போல்
அயருகிறோம்! அடைமொழி தேடுகிறோம்!
கிடைக்கவில்லை அப்பா உங்களிடம் இணைப்பதற்கு,
அயலவர் அந்நியர் எவர்க்கும் மருந்துமட்டுமா
கொடுப்பீர்கள் அருமருந்தன்ன அறிவுரையும் சேர்ப்பீர்!
அஞ்சா நெஞ்சம்! அறிவுடமை அயரா உழைப்பு
அனைத்தும் உங்கள் தனியுடமை!
ஆன்றோர் காட்டிய வழியது வாழ்ந்தீர் அன்புடன் 'மணி'
என அழைக்கும் அந்தஸ்தும் பெற்றீர் ஆர் பெறுவார்
நும் இடம் யார் தருவார் நும் பணி! மருத்துவம் மட்டுமா
கற்றீர்கள் மகத்துவம் தரும் உலகவிவகாரம்!
உவப்பிலா அறிவு! மண்டியிடா தனித்தன்மை! மாற்றோரும்
போற்றும் மாண்பு! மறக்க முடியுமா உங்கள் மனித
நேயத்தை! மன்னிப்பு! அது உங்கள் மகுடம் மாறா
அன்பால் மாற்தருள் மாணிக்கமானீர்கள்! மலைபோல்
உயர்ந்தீர் வாழ்வில்! மருப்பென கொண்டீர்! மனித
வாழ்வை 'மணி' யான அப்பாவே ஆண்டொன்று
சென்றது! அழுகை போய் அன்பு பெருகிற்று!
அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்!

தகவல்
குடும்பத்தினர்

## அதிகாரப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

குமாரு ஆறுமுகம் ஆகிய நான் 05/06/2012 அன்று திகதியிட்டு குமாரசாமி தவராஜசிங்கம் என்பவருக்கு கனகபுரம் கிளிநொச்சியில் உள்ள எனது காணி உறுதி இலக்கம் J/G/Koc/2904 க்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை (Power of Attroney) 05/11/2021 முதல் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி விடுகிறேன். எனவே எனது விடயங்கள் எதிலும் இவர் எதிர்காலத்தில் எனது சார்பில் செயற்பட முடியாதென்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

குமாரு ஆறுமுகம்

## முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்கான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குனர்களை பதிவு செய்தல் 2022

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2022 ஆம் ஆண்டிற்கான கீழ்க்குறிப்பிடப்படும் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பொருட்கள், சேவைகள், வழங்குனர்கள் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்யவிரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை மாதிரி படிவத்திற்கு அமைய தாமாக தயாரித்தோ அல்லது மாவட்டச் செயலக கொள்ளல் கிளை மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் (02.12.2021ம் திகதி தொடக்கம் 30.12.2021ம் திகதி வரை) அலுவலக நேரத்திலும்' பெற்றுக்கொள்ளமுடியும் என்பதுடன் www.mullaitivu.dist.gov.lk எனும் இணையத்தளத்திலும் தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம். பதிவு செய்வதற்கான இறுதி திகதி 30.12.2021 ஆகும். இறுதி திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**கட்டிட நிர்மாண வேலைகள்**

ஒப்பந்ததாரர்கள் ICTAD புத்தகத்தின் பதிவு பக்கம் மற்றும் முதல் பக்கம் என்பவற்றை சமர்ப்பித்தும்

கீழே உள்ள கட்டண விபரத்திற்கு ஏற்றவாறு மீளளிக்கப்படாத வைப்பு பணமாக செலுத்தி நிறுவனத்தினைப் பதிவு செய்தல் வேண்டும்.

| ஒப்பந்தத் தொகை | பதிவுக்கட்டணம் |
|---|---|
| ரூபா 2,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 2000.00 |
| ரூபா 2,000,000 இற்கு அதிகமானதும் 5,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 3000.00 |
| ரூபா 5,000,000 இற்கு அதிகமானதும் 10,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 5000.00 |

**பொருட்கள் சேவைகள் வழங்குனர்**

பொருள், சேவை வழங்குனர்கள் ஒவ்வொரு வகை வழங்குனர் பதிவிற்கும் தனித்தனியாக (தொகுதி ஒன்றிற்கு) ரூபா 300/= இனை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

* கட்டிட நிர்மான ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொருட்கள் சேவைகள் வழங்குனர்களின் வியாபாரப்பதிவு கட்டாயமாகும் என்பதுடன் அதற்குரித்தான பதிவுச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்திய பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

**கட்டண விபரம்**

வழங்குனர் பதிவுக்கான கட்டணத்தை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு என்னும் பெயரில் உள்ள இலங்கைவங்கி கணக்கிலக்கம் 7041979 ற்கு பணமாக வைப்பிலிட்டு வைப்பிலிட்ட பணத்திற்கான வங்கிவைப்புசிட்டை பிரதியினை இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது நேரடியாக மாவட்ட செயலக நிதிக்கிளையில் சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சிட்டை (பொது 172) விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

க. விமலநாதன்,
மாவட்டச் செயலாளர்,
முல்லைத்தீவு மாவட்ட செயலகம்,
முல்லைத்தீவு.


## பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளிநாடுகளில் தொழில்புரிகின்ற சில இலங்கையர்கள், இலங்கையில் தம்மைச் சார்ந்திருக்கின்றவர்களுக்கு பணம் அனுப்புகின்ற போது, அறிந்தோ அறியாமலோ, சட்டத்திற்குப் புறம்பான வழிகளூடாக பணத்தை அனுப்புகின்றனர் என இலங்கை மத்திய வங்கிக்கு தகவல் கிடைத்துள்ளது.

அவ்வாறு பணம் அனுப்புகின்ற போது, சில தரகர்கள், வெளிநாட்டில் தொழில்புரிகின்ற இலங்கையர்களின் வெளிநாட்டு நாணயத்தைச் சேகரித்து, அதற்குச் சமனான தொகையை இலங்கை ரூபாவில் அத்தகைய பணியாளர்களைச் சார்ந்துள்ளோரின் கணக்குகளுக்கு நிதியியல் முறைமையினூடாக பணமாக அல்லது பரிமாற்றல்களாக வரவுவைக்கின்ற நிகழ்வுகள் தொடர்பில் மத்திய வங்கிக்கு தெரியவந்துள்ளது. பணம் தூயதாக்குதலைத் தடுப்பதற்கான சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்றமைக்காக சட்டத்தின் நியதிகளுக்கமைய அவர்கள் தண்டனை விதிக்கத்தக்க தவறுகளைப் புரிகின்றனர் என்பது பற்றி பொதுமக்கள் அறியாதிருக்கக்கூடும். மேலும், கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் போதைப்பொருள் கடத்தலுடன் அல்லது வேறு சட்டவிரோத நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக இருக்கக்கூடுமென சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே, அறிந்தோ, அறியாமலோ இத்தகைய சட்டரீதியற்ற நடவடிக்கைகளுக்குள் சிக்கிக்கொள்ள வேண்டாமென்று வெளிநாட்டில் வதிகின்ற அனைத்து இலங்கையர்களுக்கும் அதேபோன்ற அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் இலங்கை மத்திய வங்கி அறிவிக்கின்றது.

சட்டத்திற்குப் புறம்பான தொழிற்படுத்துநர்களால் பாதிக்கப்படவேண்டாம் என்றும் இலங்கைக்கு பணம் அனுப்புகின்ற போது இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படுகின்ற வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் அல்லது சர்வதேச வங்கிகள் அல்லது நிதியியல் நிறுவனங்களூடாக மாத்திரம் பணம் அனுப்புவதை உறுதிசெய்யுமாறும் இலங்கை மத்திய வங்கி தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் வலியுறுத்துகின்றது.

இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
011-2477000 @ cbslgen@cbsl.lk www.cbsl.gov.lk

# ராகம கிரிக்கெட் கழகத்தை வீழ்த்தி சம்பியனானது தமிழ் யூனியன் கழகம்

ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாட்டின் முன்னணி கழகங்கள் பங்கேற்றிருந்த மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில், ராகம கிரிக்கெட் கழகத்துக்கெதிரான இறுதிப் போட்டியில் ஜெப்ரி வெண்டசேயின் அபாரமான பந்துவீச்சு கைகொடுக்க தமிழ் யூனியன் கழகம் 35 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

26 கழகங்கள் பங்கேற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு தமிழ் யூனியன் கழகம் மற்றும் ராகம கிரிக்கெட் கழகம் ஆகியன முன்னேறியிருந்தன.

இப்போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய ராகம கிரிக்கெட் கழகத்தின் அணித்தலைவரான இஷான் ஜயரத்ன முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தமிழ் யூனியன் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய தமிழ் யூனியன் அணியை சந்தூஷ் குணத்திலக்க (47), சுப்புன் காவிந்த, அணித்தலைவர் சதீர சமரவிக்ரம (34) ஆகியோர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர்.

பந்துவீச்சில் கல்ஹார சேனாரத்ன, இஷான் ஜயரட்ன, ஜனக்க சம்பத், நிப்புன் மாலிங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.




பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ராகம கிரிக்கெட் கழகம் 32.4 ஓவர்களில் 145 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 36 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

ஆரம்ப விக்கெட்டுக்காக இணைந்த நிஷான் மதுஷ்க, சமிந்த பெர்னான்டோ ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். இவர்கள் 10.5 ஓவர்களில் 41 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தது. அதன்பின்னர் வந்த துடுப்பாட்ட வீரர்களில் அணித்தலைவர் இஷான் ஜயரத்னவைத்(26) வேறு எவரும் பெரிதாக சோபிக்கவில்லை.

இதன் காரணமாக அவ்வணி 32.5 ஓவர்களில் 145 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் சுழற்பந்துவீச்சாளர் ஜெப்ரி வெண்டர்சே 27 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். அவரைத் தவிர, திலும் சுதீர, பிரமோத் மதுஷான் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக ஜெப்ரி வெண்டர்சே தெரிவானதுடன், போட்டித் தொடரின் நாயகனாக அசேல குணரட்ண தெரிவானார்.

# மஹிந்தவின் இளைய மகனை வாங்கிய தம்புள்ளை ஜயண்ட்ஸ்




லங்கா பிரீமியர் லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இளைய மகனான ரோஹித்த ராஜபக்ஷவை தம்புள்ளை ஜயண்ட்ஸ் அணி நிர்வாகம் வாங்கியுள்ளது.

ஆரம்பத்தில் கழக மட்ட கிரிக்கெட் விளையாடும் எண்ணம் இல்லை என மறுப்பு தெரிவித்திருந்த ரோஹித்த ராஜபக்ஷ, கடந்த ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதியன்று 2021/2022 ஆம் ஆண்டு பருவகாலத்துக்கான முன்னணி கிரிக்கெட் கழகங்கள் பங்கேற்றிருந்த மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் தொடரில் களுத்துறை நகர அணிக்காக பங்கேற்றிருந்தார்.

தனது 32 ஆவது வயதில் முதற்தர கிரிக்கெட்டில் கால்பதித்த இவர், தான் விளையாடிய முதல் போட்டியில் முதல் பந்திலேயே ஓட்டம் எதுவும் எடுக்காமல் கோல்டன் டக் முறையில் ஆட்டமிழந்தார்.

இதுவரை 3 போட்டிகளில் வெறுமனே 5 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுள்ள ரோஹித்த ராஜபக்ஷ லங்கா பிரீமியர் லீக் தொடரின் இரண்டாவது அத்தியாயத்தில் தம்புள்ளை ஜயண்ட்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார்.

லண்டனில் வசிக்கும் தொழிலதிபரான காமர் கான் உரிமையாளராகவுள்ள தம்புள்ளை ஜயண்ட்ஸ் அணிக்கு இலங்கை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் அணியின் தலைவரான தசுன் ஷானக்க அணித்தலைவராக செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதற் தடவையாக முதல் 10 இடங்களுக்குள் திமுத்



இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியலில் முதற் தடவையாக முதல் பத்து இடங்களுக்குள் முன்னேறியுள்ளார்.

ஐ.சி.சி. டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியலில் நியூசிலாந்தின் டொம் லெதம் முறையே இந்தியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டிகளில் சிறப்பான செயல் திறனினால் திமுத் கருணாரத்னவுடன் இணைந்து முதல் பத்து இடங்களுக்கு முன்னேறியுள்ளார்.

திமுத் கருணாரத்ன காலியில் நடந்த முதல் டெஸ்டில் 147 மற்றும் 83 ஓட்டங்களுடன் ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதனால் நான்கு இடங்கள் முன்னேறிய அவர், ஐ.சி.சி. பட்டியில் ஏழாவது இடத்துக்கு வந்துள்ளார். இலங்கை அணியின் ஏனைய வீரர்களான அஞ்சலோ மெத்யூஸ் இரண்டு இடங்கள் முன்னேறி 23 ஆவது இடத்தையும் தினேஷ் சண்டிமால் நான்கு இடங்கள் முன்னேறி 46 ஆவது இடத்தையும் பிடிததுள்ளனர்.

# ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பை; அரையிறுதிக்கு முன்னேறியது இந்தியா



2016 இல் லக்னோவில் நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியின் போது, இறுதிப்போட்டியில் பெல்ஜியம் அணியை இந்தியா 2-1 என வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியது.

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் ஜூனியர் ஹாக்கி உலகக் கிண்ண தொடர் விறுவிறுப்பாக நடைபெறுகிறது.

இதில், நடப்பு சாம்பியனான இந்திய அணி, நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில், ஐரோப்பாவின் மிகவும் வலுவான அணியான பெல்ஜியம் அணியை எதிர்கொண்டது.

துவக்கத்தில் சில நிமிடங்கள் பெல்ஜியம் வீரர்கள் ஆக்ரோஷமாக ஆடி இந்திய வீரர்களுக்கு கடும் நெருக்கடி கொடுத்தனர்.

எந்த வாய்ப்பும் கொடுக்காமல் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தினர். அதன்பின்னர் இந்திய வீரர்கள் சுதாரித்து ஆடினர்.

21 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கோர்னர் வாய்ப்பில், இந்திய வீரர் சர்தானந்த் திவாரி கோல் அடித்து அசத்தினார். அதன் பின்னர் இறுதி வரை இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. எனவே, இந்தியா 1-0 என வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறிது.

2016 இல் லக்னோவில் நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியின்போது, இறுதிப்போட்டியில் பெல்ஜியம் அணியை இந்தியா 2-1 என வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது. இந்த முறையும் பெல்ஜியம் அணியை வீழ்த்தி உள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் ஜெர்மனி அணியுடன் இந்தியா மோத உள்ளது. 6 முறை சம்பியன் பட்டம் வென்ற ஜெர்மனி, காலிறுதியில் 3-1 என ஸ்பெயின் அணியை வென்றது குறிப்பிடத்தக்கது.

-விதிமுறைகளை மீறியதாக புகார்-

# ராகுல், ரஷீத்கான் இருவருக்கும் ஐ.பி.எல்லில் விளையாட தடை?



தன்னை அணியில் இருந்து விடுவிக்கும்படியும், ஏலத்தில் பங்கேற்க விரும்புவதாகவும் ராகுல் கூறியதை தொடர்ந்து அவரை தக்க வைக்கவில்லை என்று பஞ்சாப் அணி நிர்வாகம் தெரிவித்தது.

15 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் புதிதாக லக்னோ, அகமதாபாத் ஆகிய 2 அணிகள் சேர்க்கப்பட்டு உள்ளன. இதனால் அடுத்த ஆண்டு நடைபெறும் போட்டியில் மொத்தம் 10 அணிகள் பங்கேற்கின்றன.

இந்த போட்டிக்கான வீரர்களை தக்க வைத்துக் கொள்வதற்கான காலக்கெடு நேற்று முன்தினம் முடிந்தது. 8 அணிகளும் மொத்தம் 27 வீரர்களை தக்க வைத்து கொண்டுள்ளது. இதில் 4 பேர் சர்வதேச போட்டியில் விளையாடாத வீரர்கள் ஆவார்கள்.

சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி கப்பிட்டல்ஸ், கொல்கத்தா நைட்ரைடர்ஸ், மும்பை இந்தியன்ஸ் ஆகியவை தலா 4 வீரர்களையும், ராஜஸ்தான் ராயல்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர், சன்ரைசர்ஸ் ஐதராபாத் ஆகியவை தலா 3 வீரர்களையும், பஞ்சாப் 2 வீரர்களையும் தக்க வைத்து உள்ளன.மிகவும் எதிர்பார்க்கப்பட்ட லோகேஷ் ராகுல் பஞ்சாப் அணியிலும், ரஷீத்கான் ஐதராபாத் அணியிலும் தக்க வைக்கப்படவில்லை.

தன்னை அணியில் இருந்து விடுவிக்கும்படியும், ஏலத்தில் பங்கேற்க விரும்புவதாகவும் ராகுல் கூறியதை தொடர்ந்து அவரை தக்க வைக்கவில்லை என்று பஞ்சாப் அணி நிர்வாகம் தெரிவித்தது. ரஷீத்கான் சில நிபந்தனைகளை முன் வைத்ததால் தக்கவைக்கவில்லை என்று ஐதராபாத் அணி நிர்வாகம் தெரிவித்தது.

இதற்கிடையே லோகேஷ் ராகுலையும், ரஷீத்கானையும் புதிய அணியான லக்னோ விதிகளை மீறி மூளை சலவை செய்து தங்கள் அணியிலிருந்து வெளியேற்றி விட்டதாக பஞ்சாப், ஐதராபாத் அணிகள் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையிடம் வாய்மொழியாக புகார் கொடுத்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த 2 ஆண்டுகளாக பஞ்சாப் அணியின் கப்டனாக இருந்த ராகுலை 16 கோடிக்கு தக்கவைக்க பஞ்சாப் அணி திட்டமிட்டு இருந்ததாகவும், ஆனால் அவருக்கு 20 கோடி வரை கொடுத்து ஒப்பந்தம் செய்ய லக்னோ அணி நிர்வாகம் பேசியதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இதேபோல ரஷீத்கானை 9 கோடிக்கு தக்கவைக்க ஐதராபாத் அணி முடிவு செய்துள்ளதாகவும் அவருக்கு லக்னோ அணி 16 கோடி பேசியதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் வீரர்கள் மீதும், லக்னோ அணி நிர்வாகம் மீதும் எழுத்துப் பூர்வமாக புகார் எதுவும் வரவில்லை என்று கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.ராகுல், ரஷீத்கான் மீது விதிமீறல் இருந்து, அவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் ஐ.பி.எல். போட்டியில் விளையாட ஒரு ஆண்டு தடை விதிக்கப்படும். கடந்த காலங்களில் இதே மாதிரியான குற்றச்சாட்டில் ரவீந்திர ஜடேஜாவுக்கு ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட்டு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பிரதமர் மஹிந்த தலைமையில் நடந்த நத்தார் தின நினைவு முத்திரை வெளியீட்டு நிகழ்வு



நத்தார் தின நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறை என்பவற்றை வெளியிடும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரி மாளிகையில் இடம்பெற்றது.

முதலில் தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன, நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறை என்பவற்றை வெகுஜன ஊடக அமைச்சர் டளஸ் அழகப்பெருமவிடம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, டளஸ் அழகப்பெருமவினால் நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறை ஆகியன பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கிவைக்கப்பட்டது.

45 ரூபா மற்றும் 15 ரூபா பெறுமதியான முத்திரைகளே இவ்வாறு வெளியிடப்பட்டன. சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட பிரிவில் முத்திரை வடிவமைப்பு போட்டியில் வெற்றிபெற்ற கந்தானை புனித செபஸ்தியன் மகா வித்தியாலயத்தின் நிமேஷ் சமத் பெரேரா மாணவன் மற்றும் நுகேகொட அனுலா வித்தியாலயத்தின் ஷினாலி ருவண்யா பீரிஸ் மாணவி ஆகியோரின் சித்திரங்களைக் கொண்டு, நத்தார் தின நினைவு முத்திரை வடிவமைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

புனித செபஸ்தியன் மகா வித்தியாலயத்தின் நிமேஷ் சமத் பெரேரா எனும் மாணவனினால் வரையப்பட்ட, கௌரவ பிரதமரின் உருவப்படம், இதன் போது அம்மாணவரினால், பிரதமருக்கு வழங்கப்பட்டது.

கனிஷ்ட பிரிவில் வெற்றிபெற்ற, நுகேகொட அனுலா வித்தியாலயத்தின் ஷினாலி ருவண்யா பீரிஸ் மாணவியும், இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டிருந்தார்.

கங்காராம விகாராதிகாரி கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினர் மற்றும் கலாநிதி செக்டஸ் குருகுலசூரிய மற்றும் பர்ட்ரம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோரும், இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

குறித்த சந்தர்ப்பத்தில், பிரதமரின் செயலாளர் காமினி செனரத், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, பிரதமரின் மத விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் எம்.கே.ரத்னாயக்க, தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன, பிரதி தபால்மா அதிபர் ராஜித கே.ரணசிங்க, முத்திரை பணியகத்தின் பணிப்பாளர் சாந்த குமார மீகம, கிறிஸ்தவ விவகார திணைக்களத்தின் பணிப்பாளர்களான சதுரி பின்டோ மற்றும் மாதவீ திவ்யாஞ்சலி உள்ளிட்ட பலரும், கலந்து கொண்டிருந்தனர்.

## இதுவரையில் ஏழு லட்சத்திற்கும் அதிகமானோருக்கு பூஸ்டர் தடுப்பூசி



இலங்கையில் இதுவரை 7 இலட்சத்து 27ஆயிரத்து, 370 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

தொற்று நோயியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளது. அதன்படி, நாட்டில் இதுவரை ஒரு கோடியே 59 இலட்சத்து 33 ஆயிரத்து 967 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸும், ஒரு கோடியே, 37 இலட்சத்து, 53 ஆயிரத்து 715 பேருக்கு, கொவிட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸும், வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திடீரெனத் தீப்பற்றி எரிந்து நாசமானது மோட்டார் சைக்கிள்



புத்தளம் தில்லையடிப் பகுதியிலுள்ள இரவு நேர ஹோட்டலுக்கு முன்பாக மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தில்லையடியிலுள்ள ஹோட்டலில் உணவு எடுத்துச் செல்வதற்காக வருகை தந்த, ஒருவருடைய மோட்டார் சைக்கிளொன்றே, இவ்வாறு தீப்பிடித்துள்ளது.

குறித்த நபர் ஹோட்டலுக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, உணவுத் தேவைகளை முடித்துக் கொண்டு, பயணிப்பதற்காக, மீண்டும் மோட்டார் சைக்கிளை இயக்குவதற்கு ஆரம்பித்துள்ளார். இதன்போதே, குறித்த மோட்டார் சைக்கிள் திடீரெனத் தீப்பற்றி எரிய ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, குறித்த ஹோட்டல் உரிமையாளர் உட்பட பணியாளர்களும், ஹோட்டலுக்கு வருகை தந்தவர்களும் கூட்டாக இணைந்து, சில நிமிடங்களில் தீயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். இதனால், குறித்த மோட்டார் சைக்கிள் முழுமையாக எரிந்துள்ளபோதிலும், உயிர்ச் சேதங்கள் எதுவும், ஏற்படவில்லை. நாட்டில் தற்போது சமையல் எரிவாயு சிலிண்டர்கள், திடீரென வெடித்துச் சிதறும் சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில், இவ்வாறு ஹோட்டலுக்கு முன்பாக மோட்டார் சைக்கிள் தீப்பிடித்து எரிந்தமை, தில்லையடிப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பும் இலங்கையர்களுக்கு மத்திய வங்கி ஆளுநர் விடுத்துள்ள விசேட அறிவிப்பு

புலம்பெயர்ந்த இலங்கைப் பிரஜைகள் தங்களின் உழைப்பினூடாக ஈட்டிய வருமானத்தை திருப்பி அனுப்புவதற்கு சட்ட ரீதியான வழி முறைகளை மாத்திரம் பயன்படுத்துமாறு, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் வேண்டுகோள் விடுத்துள்ளார். தனது, டுவிட்டர் பக்கத்தில் இது குறித்த தகவலை குறிப்பிட்டுள்ளார்.

அதில், சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபடுவோரின், வங்கிக் கணக்குகள் உடனடியாக முடக்கப்படுமெனவும், அஜித் நிவார்ட் கப்ரால் எச்சரித்துள்ளார்.

## ஐம்பதாயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்படும் இழப்பீட்டுத் தொகை

வீதி விபத்துகளில் உயிரிழப்போரின் குடும்பத்தினர் மற்றும் பலத்த காயமடைந்தோருக்கு, தற்போது வழங்கப்படும் நட்ட ஈட்டுத் தொகையை, 50,000 ரூபாவினால், அதிகரிப்பதற்கு, போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, விபத்துக்களில் உயிரிழப்போரின் குடும்பத்தினருக்கு, இதுவரை வழங்கப்பட்ட 2 இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகை, இரண்டரை இலட்சம் ரூபாவாகச் செலுத்தப்படுமென, போக்குவரத்து அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைவோருக்கு வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபா, இழப்பீட்டுத் தொகையை ஒன்றரை இலட்சம் ரூபா வரை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாகவும், போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தீர்மானம், 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், அமுல்படுத்தப்படுமென, போக்குவரத்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், குறிப்பிடப்பட்டுள்ளது.





**லக்ஷ்மி நாராயணா திருமண சேவை**
**266, பலாலி வீதி, கந்தர்மடம்.**
**தொடர்புகளுக்கு: 0771971667/0773164796**

**மணமகன் விபரம்**

பிறந்த திகதி :10.06.1991 மதம்: இந்து (V)
நட்சத்திரம் : பரணி கி.பா. :28 செவ் 4 க்
தகைமை: B.Sc தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரசசேவை மணமகள்
(காரைநகர் முன்னுரிமை)

பிறந்த திகதி : 01.11.1984 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: அவிட்டம் (2) கி.பா.: 52 செவ் 7 க்
தகைமை:B.A தொழில் :D.O அரசசேவை
எதிர்பார்ப்பு:அரசசேவை மணமகள்

பிறந்த திகதி:20.03.1986 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: புனர்பூசம் (2) கி.பா.: 51 செவ் 7 க்
தகைமை: M.B.A UK தொழில்: UK PR
எதிர்பார்ப்பு:படித்த மணமகள் UK/இலங்கை

பிறந்த திகதி: 24.05.1981 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தராடம் (3) கி.பா. : 25 செவ் 2 க்
தகைமை: B.Sc தொழில்:UK PR
எதிர்பார்ப்பு: பட்டதாரி UK/இலங்கை மணமகள்

பிறந்த திகதி: 31.05.1984 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: ரோகிணி கி.பா.: 40 செவ் 5 க்
தகைமை:G.C.E A/L தொழில்:UK PR
எதிர்பார்ப்பு: UK/இலங்கை மணமகள்

பிறந்த திகதி:03.07.1990 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: விசாகம் (2) கி.பா.: 27 செவ் 6 க் உ.5'6"
தகைமை: M.B.B.S தொழில்:Vetnary Surgent
எதிர்பார்ப்பு:Doctor,Eng.,Dental,M.L.T மணமகள்
வெளிநாடு/உள்நாடு

பிறந்த திகதி: 24.05.1981 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தராடம்(3) கி.பா.: 25 செவ் 2 க்
தகைமை: B.Sc தொழில்: UK PR
எதிர்பார்ப்பு :UK/Ceylon பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி:30.04.1992 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தரட்டாதி கி.பா.: 33 செவ் 2 க்
தகைமை: E.Eng. தொழில்:விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரசசேவை மணமகள்

**மணமகள் விபரம்**

பிறந்த திகதி:05.03.1991 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி கி.பா.:18 செவ் 7 க்
தகைமை: Business Management
தொழில்: Bank Officer
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரசசேவை/தனியார் மணமகன்

பிறந்த திகதி:27.09.1990 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: மூலம் கி.பா.: 34 செவ் 6 க்
தகைமை: B.Sc,M.Sc தொழில்:Australiya PR
எதிர்பார்ப்பு: Australiya+Newzealand பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி: 29.07.1996 மதம்: இந்து (V)
நட்சத்திரம்:பூராடம் (1) கி.பா.: 16 செவ் 9 க் உ.5'6"
தகைமை: M.B.B.S தொழில்: Doctor
எதிர்பார்ப்பு : UK/ Australiya/ பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி: 25.09.1981 மதம்: இந்து (P)
நட்சத்திரம் : மகம் கி.பா. :62 செவ் 7 க்
தகைமை: G.C.E A/L Computer தொழில்:Company
எதிர்பார்ப்பு : அரசசேவை மணமகன்

பிறந்த திகதி:16.11.1992 மதம்: இந்து (V) சைவம்
நட்சத்திரம்: பூசம் கி.பா. : 56 செவ் 4 க்
தகைமை: பட்டதாரி தொழில்:CanadaPR
எதிர்பார்ப்பு:பட்டதாரி சைவம் மணமகன்

பிறந்த திகதி : 07.09.1985 மதம் : இந்து (V)
நட்சத்திரம் :அச்சுவினி கி.பா. : 35 செவ்/சூரி 5 க்
தகைமை: M.B.B.S தொழில்:Doctor
எதிர்பார்ப்பு :Doctor/Eng. மணமகன்

பிறந்த திகதி: 01.09.1992 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: சித்திரை (4) கி.பா.: 16 செவ் 11 க்
தகைமை: B.S,M.S
தொழில்: சித்த மருத்துவர்
எதிர்பார்ப்பு: Doctor/Eng மணமகன்

பிறந்த திகதி: 18.09.1994 மதம்: இந்து (P)
நட்சத்திரம்: சதயம் கி.பா.:29 செவ் 8 க்
தகைமை: B.B.M தொழில்: D.O அரசசேவை
எதிர்பார்ப்பு:அரசசேவை மணமகன்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் யாழ்.தினக்குரல் பதிப்பிலும் மற்றும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கொழும்பு தினக்குரல் பதிப்பிலும் வெளிவரும் இம்மாங்கல்யாபகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**தொ.இலக்கம்: 0779687613/0217388307**


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி. வழங்குனர்களை பதிவுசெய்தல் - 2022

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையானது 2022ம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், வேலைகள். சேவைகள் வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ளவிரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**தொகுதி'A'பொருட்கள் வழங்குதல் (பொது)**
**தொகுதி'B'சேவைகள்/வேலை**
**தொகுதி'C'வாகனதிருத்தமும் சுத்திகரிப்புசெய்தலும்**
**தொகுதி'D'ஒப்பந்தவேலைகள்**
**தொகுதி'E'உணவு வகை**
**தொகுதி'F'வாடகை சேவை**

| தொகுதிA | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A -02 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A-03 | தளபாடங்களும், அலுவலகஉபகரணங்கள் |
| A-04 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் ,நிழல்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A-05 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A-06 | குளியலறைபொருத்திகள் மாபிள்கல் வகைகள் ,நீர்வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-07 | கட்டட இரும்புப்பொருட்கள், பெயின்ற் வாணிஸ் மற்றும் காட்வெயார் பொருட்கள் |
| A-08 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் ,மின் மோட்டார்கள், மின்சாரபல்ப்புக்கள் ,மின் விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-09 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம் ,மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A-10 | சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A-11 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், ரயர்,ரியுப் மற்றும் ஏனையவை |
| A-12 | தோல் உற்பத்திப் பொருட்கள்,கம்புட்ஸ்க்கள் |
| A-13 | இலத்திரனியல் சாதனங்கள், துணைபொருட்கள் |
| A-14 | எரிபொருட்கள், உராய்வுநீக்கிகள் |
| A-15 | கற்கள், மண் வகைகள் |
| A-16 | தீராந்திகள், பலகைகள் |
| A-17 | அலங்காரப் பொருட்கள் |
| A-18 | பனைமரங்கள், சலாகைகள் |

| தொகுதிB | சேவைகள்/வேலை |
|---|---|
| B-01 | மரத்தளபாடங்கள், உருக்கு தளபாடங்கள் திருத்தம் |
| B-02 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள்,மின் மோட்டார்கள்,மின்விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் நிழல் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணனி விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் திருத்தம் |
| B-03 | இலத்திரனியல் சாதனங்கள், துணை பொருட்கள் திருத்தம் |
| B-04 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B-05 | கோலவுடை தைத்தல் |
| B-06 | சுத்திகரிப்புசேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B-07 | கணனி,பிறின்ரர் அதனுடன் இணைந்தபொருட்கள் திருத்தமும், பராமரிப்புசெய்தலும் |
| B-08 | வளிச்சீராக்கி இயந்திரம் கொள்வனவு, திருத்தம் |
| B-09 | அச்சிடல், புத்தகங்கள் கட்டுதல் |
| B-10 | ஏற்றியிறக்கும் சேவை (தார் முதலானவீதி மூலப் பொருட்கள் மற்றும் கட்டிட மூலப் பொருட்கள்) |

| தொகுதிC | வாகன திருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும் |
|---|---|
| C-01 | சகலவிதமான வாகனசுத்திகரிப்பு உராய்வு நீக்கிகள் |
| C-02 | வாகனங்களுக்குரிய ரியுப் ஒட்டுதல், உலோக வேலைகள் |
| C-03 | உழவு இயந்திர, உழவு இயந்திரப் பெட்டி திருத்தம் |
| C-04 | சகலவிதமான வாகன திருத்தம் |
| C-05 | நீர் இறைக்கும் இயந்திர திருத்தம் |
| C-06 | மோட்டார் சயிக்கிள் திருத்தம் |

| தொகுதிD | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| D-01 | கட்டட நிர்மாணமும், திருத்தம் |
| D-02 | வீதி நிர்மாணமும், திருத்தம் |
| D-03 | கிணறு அமைத்தல் |

| தொகுதிE | உணவு வகை |
|---|---|
| E-01 | சமைத்த உணவு, சிற்றுண்டி வகை, குளிர்பானம் |

| தொகுதிF | வாடகை சேவை |
|---|---|
| F-01 | பைக்கோ லோடர் இயந்திரம் (Backhoe Loader) |
| F-02 | புல்டோசர் இயந்திரம் (Pull Dozer) |
| F-03 | மோட்டார் கிறேடர் இயந்திரம் (Motor grader) |

**நிபந்தனைகள்**

- வழங்கல்கள்/சேவைகள்2022ம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
- ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி விண்ணப்பபடிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்பபடிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் எமது தலைமை அலுவலகத்தில் ரூபா.1000.00 செலுத்தி தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல்கள்/ சேவைகள் 2022 எனக்குறிப்பிட்டு தவிசாளர், வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை, கரவெட்டி. என்னும் முகவரிக்கு 31.12.2021ந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- திருப்திகரமற்ற வழங்கல்கள்/சேவைகளை நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
- பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

03.12.2021

திரு.த.ஐங்கரன்
தவிசாளர்,
வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

# நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மூன்று எம்.பிக்களுக்கு அழைப்பாணை

மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி, நீதிமன்றில் முன்னிலையாகுமாறு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா அழைப்பாணை வெளியிட்டுள்ளார்.

அசாத் சாலிக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான மொஹமட் முஸம்மில், நிமல் பியதிஸ்ஸ மற்றும் ஜயனந்த வெல்லபட ஆகியோருக்கெதிராக, இந்த அழைப்பாணை வெளியிடப்பட்டுள்ளது.

அசாத் சாலியை அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுதலை செய்வதாக, தீர்ப்பை அறிவித்த பின்னர், அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, வழக்கின் முறைப்பாட்டாளர்களான மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும், தனது கட்சிக்காரருக்கு எதிராக, தீங்கிழைக்கும் முறைப்பாட்டொன்றை தாக்கல் செய்துள்ளதாகவும், அதன்படி, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 17 (2)வது சரத்தின் கீழ், இழப்பீடு வழங்குமாறு உத்தரவிட வேண்டுமென, நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

இதன்படி, குறித்த முறைப்பாட்டினை, பெப்ரவரி 21 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு, உத்தரவிட்ட மேல் நீதிமன்ற நீதிபதி, மொஹமட் முஸம்மில் உள்ளிட்ட மூன்று மனுதாரர்களையும், அன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு, அழைப்பாணை வெளியிட்டார்.

## உளவியல் கருத்தரங்கு நடத்துவதற்கு துப்பாக்கியுடன் சென்ற மூவர் கைது

பதுளை - ஹாலிஎல பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில், மாணவர்களுக்கான உளவியல் கருத்தரங்கை நடத்துவதற்குச் சென்றிருந்த, ஆலோசகர் மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் மூவர், துப்பாக்கி மற்றும் 129 தோட்டாக்கள் உள்ளிட்ட பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கறுப்பு நிற ஆடை அணிந்திருந்த இவர்கள், துப்பாக்கியொன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதாக, ஹாலிஎல காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

பின்னர் காவல்துறை உத்தியோகத்தர்கள் குழுவொன்று அப்பாடசாலைக்கு விஜயம் செய்து, விசாரணைகளை மேற்கொண்டதில், குறித்த வேலைத்திட்டத்திற்கு, மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி பெறப்படவில்லையெனத், தெரியவந்துள்ளது. பாடசாலைக்கு ஆலோசகராக வந்திருந்த நபர், எந்தவொரு நிறுவனத்தின் சார்பிலும், இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான பதிவுகளை மேற்கொண்டிராத, துறைசார் தகைமைகளைக் கொண்டிருக்கவில்லையென, விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## வருமான அறவீடுகளை டிஜிட்டல் மயமாக்கியது கல்முனை மாநகர சபை

ஐரோப்பிய யூனியன் அனுசரணையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தினால் (யூ.என்.டி.பி) உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்திறனை கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ், கல்முனை மாநகர சபையின் வருமான அறவீடுகளை டிஜிட்டல் மயப்படுத்தும் முறைமை, அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் யூ.என்.டி.பி. நிறுவனத்தின் கிழக்கு மாகாண திட்ட இணைப்பாளர், ஷாமிர் ஷாலிஷின் ஒருங்கிணைப்பில், முதல்வர் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.மணிவண்ணன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். இதன்போது, குறித்த இலத்திரனியல் செயலியின் நோக்கம், பயன்பாடுகள் மற்றும் அனுகூலங்கள் தொடர்பாக அதன் வடிவமைப்பாளர் விளக்கமளித்தார்.

அத்துடன், வெளிநாட்டிலிருந்து விசேடமாக கொள்வனவு செய்யப்பட்ட இலத்திரனியல் கருவிகள், மாநகர சபையின் வருமான அறவீட்டாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இதன் மூலம், கல்முனை மாநகர சபையின் அனைத்து வருமான அறவீடுகளும், இலத்திரனியல் முறைமையின் ஊடாக, முன்னெடுக்கப்படவுள்ளன.

## பாட்டியின் அரவணைப்பிலிருந்த பெண் பிள்ளைகளை கொடுமைப்படுத்திய தாய் மாமன் பொலிஸாரால் கைது

மொனராகலை- ஒக்கம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்டெமண்டிய பிரதேசத்தில், பாட்டியின் அரவணைப்பிலிருந்த இரண்டு பிள்ளைகளைக் கொடுமைப்படுத்திய, குறித்த பிள்ளைகளின் மாமா, பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

13 மற்றும் 9 வயது சிறுமிகள் இருவரையும், கொடுமைப்படுத்திய குற்றச்சாட்டில், அப்பிள்ளைகளின் தாயின் உடன்பிறந்த சகோதரனான 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமிகளின் தந்தை, தாயையும் பிள்ளைகளையும் கைவிட்டுச் சென்றுள்ள நிலையில், தாய் கொழும்பில் பணிபுரிந்து வருகிறார்.

இந்த நிலையில்,சிறுமிகள் பாட்டியின் பராமரிப்பிலிருந்து வந்த நிலையிலேயே, குறித்த நபர், சிறுமிகளை கடுமையாகத் தாக்கி, மிளகாய்த் தூளை கரைத்து முகத்தில் ஊற்றியுள்ளார். இதனையடுத்து, சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டு, வெல்லவாய நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## மாநகர சபை உறுப்பினரின் முயற்சியினால் பொருத்தப்பட்ட LED மின்குமிழ்கள்

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் கல்முனை மாநகர சபை மேயரினால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக, மாநகர உறுப்பினர்களுக்கு 2021 ஆம் ஆண்டிற்குரிய, பாதீட்டில் மூன்று லட்சம் ரூபா ஒதுக்கீட்டின் பிரகாரம், கல்முனை மாநகர சபை ஐந்தாம் வட்டார உறுப்பினர் சிபான் பஹறுத்தீனின் வேண்டுகோளின் பேரில், 300,000 ரூபா பெறுமதியான LED மின்குமிழ்கள் பொருத்தப்பட்டன.

இதனால், மருதமுனை மக்பூலியா வீதி, ஜாயா வீதி, அல் ஹம்றா வீதி, அல் மினன் வீதி, ஹாஜியார் வீதி, பிரான்ஸ் ஸிடி போன்றவற்றின் சில பகுதிகள் ஒளியூட்டப்பட்டன. இதன்போது கருத்து தெரிவித்த, கல்முனை மாநகர சபை சிபான் பஹறுதீன், கல்முனை மாநகர மேயரின் இந்த நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்ததுடன், கட்சி பேதமற்ற அவருடைய நடவடிக்கைக்காக பாராட்டுக்களையும் கூறினார்.

எதிர்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற வேண்டுமென, வலியுறுத்திய அவர், புரிந்துணர்வுடனான அரசியல் நடவடிக்கைக்கு, இது உந்து சக்தியாக அமைவதாகவும் தெரிவித்தார்.

# தமிழ் சமூகத்தின் மாறாத சிந்தனையும் மாற்றுத் திறனாளிகளும்



-இன்று சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்

சம வாய்ப்பு என்பது வழக்கொழிந்து போய் சமத்துவமும் பன்மைத்துவமும் என்பதே வளர்ச்சி கண்ட சமூகங்களின் தாரக மந்திரமாக மாறியுள்ள இக்காலகட்டத்திலும் இலங்கையில் குறிப்பாக தமிழ் சமூகத்தின் மத்தியில் இவை பற்றிய விழிப்புணர்வு போதுமானதாக இல்லை. பல்வேறு வகைப்பட்ட கலாச்சார, சமூக, பொருளாதாரப் பின்னணிகளில் இருந்து வருவோருக்கு வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனைவருக்கும் சம வாய்ப்பு என்ற அடிப்படையில் திட்டங்கள் வகுக்கப்படுமானால் அந்நாடுகளில் அவ்வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல் உள்ளவர்களால் மட்டுமே அவற்றைப்பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான ஆற்றல் இல்லாதவர்களுக்கு சமவாய்ப்பு என்பதற்கு எவ்வித அர்த்தமும் கிடையாது. இந்தப் பின்னணியிலேயே சம வாய்ப்பு என்பது காலாவதியாகி சமத்துவமும் பன்மைத்துவமும் சமூக முன்னேற்றத்திற்கான அடிப்படைகளாக மாறின.

மற்றவர்களைப் பாகுபாட்டோடு நடத்துகின்ற போக்கு தமிழ் சமூகத்தில் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்ட போக்காகவே இருந்து வந்துள்ளது. வயது, பால், சாதி, மதம், பிரதேசம், தொழில், பொருளாதாரச் சூழல் என்று பல்வேறு காரணிகளின் அடிப்படையில் மக்கள் வெவ்வேறு வகையான பாகுபாடுகளை அனுபவிக்கின்றனர். இந்தப் பாகுபாடுகளோடு கூடவே உடலியல் குறைபாடுகள் மூளைவளர்ச்சிக் குறைவும் சேர்கின்றபோது, இந்தப் பாகுபாடானது பாதிக்கப்பட்டவர்களை மிக அசாதாரண சூழலுக்குள் தள்ளுகின்றது. குறிப்பாக வளர்ச்சி அடைந்த நாடுகளில் இவ்வாறான பாகுபாடுகளை கையாள்வதற்கான உள்ளுணர்வைச் சமூகமும்,சட்டப் பாதுகாப்பை அரசும் ஓரளவுக்கு ஏற்பாடு செய்து வழங்கியுள்ளன.

குறிப்பாக பிரித்தானியாவை எடுத்துக்கொண்டால் உள்ளுணர்வு, பொதுப் புத்தியைக் கடந்து அரசு விளிம்புநிலை மக்களுக்கான சட்டப்பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. ஈகுவாலிற்றி அக்ற் 2010 (சமத்துவச் சட்டம் 2010) அதுவரை இருந்த 160 சட்டநியமங்களை ஒன்றாக்கி அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்து சமத்துவத்தை நடைமுறைச் சாத்தியமாக்குவதை இலகுவாக்கியது. குறிப்பாக யார் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் இச்சட்டம் வரையறுத்துள்ளது. அதன்படி பின்வரும் எட்டு வகை இயல்புடையோரும் சட்டப்பாதுகாப்பை பெற்றுள்ளனர்:

வயது,உடல் ஊனம், பால் மீள்தேர்வு, திருமணமும் சேர்ந்து வாழ்தலும், தாய்மையும் மகப்பேறும், இனம், சமயம்,பால். இவ்வளவு சட்டப் பாதுகாப்பும் இருந்த போதும் கூட,ஊனமுற்றவர்கள் நாளாந்தம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தே வருகின்றனர்.

அப்படி இருக்கையில் இலங்கை போன்ற நாடுகளில், குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் ஊனமுற்றவர்களின் வாழ்க்கை என்பது எமது கற்பனைக்கும் எட்டாத துன்பகரமானது என்றால் மிகையல்ல.

இன்றும் தமிழ் சினிமாவில் ஊனமுற்றவர்களை கிண்டலடிப்பதும் அவர்களின் ஊனத்தை எள்ளிநகையாடுவதும் ஒரு வகை நகைச்சுவையாகவே பெரும்பாலானவர்களால் ரசிக்கப்படுகின்றது. இவ்வாறான நடைமுறைகளைக் கண்டிக்கின்ற, எதிர்க்கின்ற இயல்புகள் குறிப்பிடத்தக்க அளவில் எம்மிடையே வெளிப்படுத்தப்படவில்லை. இவர்கள் பாதிக்கப்பட்டவர்களுடைய நிலையில் இருந்து அதனைப் பார்க்கத் தவறிவிடுகின்றனர். சமூகத்தின் பெரும்பான்மையோடு ஒத்தோடுகின்ற போக்கே இன்னமும் பொதுவிதியாக உள்ளது. இதனால் தமிழ் சமூகத்தில் பாகுபாடும் துவேசமும் மிகப்பொதுவானதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான ஒரு அம்சமாகவே இன்னமும் உள்ளது. உரிமை என்பதனை தமக்கானது மட்டுமே எனப் பலரும் புரிந்து வைத்துள்ளனர். அந்த உரிமை மற்றவர்களுக்கும் இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளத் தவறுகின்றனர்.

ஊனம் என்பது பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றது:

"Person with disability means any person who, as a result of any deficiency in his physical or mental capabilities, whether congenital or not, is unable by himself to ensure for himself, wholly or partly, the necessities of life"

அதாவது,ஊனமுற்றவர் என்றால் அவர் உடல் அல்லது மூளைச் செயற்பாடுகளில் அறிவு சார்ந்தோ அல்லது இல்லாமலோ குறையுடையவராக தனது வாழ்க்கையை தானே முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கவனிக்க முடியாதவராக இருப்பார் என வரையறுக்கின்றது. 2012 இல் இலங்கையில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி ஆறு வகையான செயற்பாட்டு குறைபாடுகள் இனம் காணப்பட்டுள்ளது. பார்வை, கேட்டல், இயக்கம், மூளைத்திறன், நாளாந்த செயற்பாடு,தொடர்பாடல் ஆகிய குறைபாடுகள். இலங்கையில் 16 லட்சத்திற்கு சற்று அதிகமானவர்களுக்கு இவ்வாறான குறைபாடுகள் உள்ளன. இவர்களில் பெரும்பான்மையானவர்கள் பார்வைக் குறைபாடுடனும் நடந்து இயங்க முடியாதவர்களாகவும் உள்ளனர். இக்குறைபாடுகள் பெண்களில் கணிசமான அளவு அதிகமாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு ஆயிரம் பேரில் 87 பேர் குறைபாடுடையவர்களாக உள்ளனர். 57 வீதமான பெண்களும் 43 வீதமான ஆண்களும் குறைபாடுடையவர்களாக உள்ளனர். குறைபாடுகளுடன் வாழ்வது என்பதே மிகக் கடினமானதாக இருக்கின்ற போது, அவ்வாறு பாதிக்கப்பட்டவர் பெண்ணாகவும் இருக்கின்ற போது, அதன் பாதிப்பு அதீதமாக இருக்கும். மேலும் வயதோடு இந்தக் குறைபாடுகளின் எண்ணிக்கையும் விகிதாசாரமும் அதிகரித்துச் செல்கின்றது. வயோதிபர்களிடையேயே குறைபாடுகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது.

குறைபாடுகளுடன் உள்ள 16 இலட்சம் பேரில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். மற்றைய மூன்றில் இரண்டு பகுதியினர் தங்கி வாழ வேண்டிய நிலையிலேயே உள்ளனர். வெளிநாடுகளில் உள்ள பொருளாதார, சட்டப் பாதுகாப்புகள் இலங்கையில் கிடையாத நிலையில், அங்குள்ள குடும்ப உறுப்பினர்களில் தங்கி வாழ்வதென்பது குடும்ப உறுப்பினர்களுக்கு சுமையாகவும் அதன் காரணமான நெருக்கடிகளுக்கும் ஏச்சுக்களுக்கும் பேச்சுக்களுக்கும் இவர்கள் முகம்கொடுக்க வேண்டியுமிருக்கின்றது. இந்த மூன்றில் இரண்டு பகுதியினரில் அரைவாசிப்பேர் வருமானம் இல்லாத வீட்டுவேலைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் அதே வேளை,மற்றைய பகுதியினர் வயோதிபம் காரணமாக வேலை செய்ய முடியாதவர்களாக உள்ளனர்.



குறைபாடுகளுடைய 16 லட்சம் பேரில் 96 வீதமானவர்கள் எவ்விதமான கல்விச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருக்கவில்லை. வெறும் 3.4 வீதமானவர்கள் 55,000 பேர் வரையானவர்கள் மட்டுமே பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொண்டிருந்தனர். 0.1 வீதமான இரண்டாயிரத்துக்கும் சற்றுக் கூடியவர்கள் மட்டுமே பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தனர். குறைபாடுடையவர்களின் கல்வித் தரம் என்று பார்க்கின்றபோது முன்பள்ளி (35%), இடைநிலைப் பள்ளி (34%), க.பொ.த சாதாரண தரம் (11%), க.பொ.த உயர்தரம் (5.2%), பட்டப்படிப்பு (1.3%) என்று எடுத்துக்கொண்டால் அவர்களுடைய கல்விமட்டம் கீழ்நிலையிலே இருப்பதை அவதானிக்கலாம். குறைபாடுடையவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வருமானத்தை ஈட்டித்தராத வீட்டு வேலைகளுக்குள் தங்களை முடக்குவதற்கு அவர்கள் போதிய கல்வியூட்டப்படாமை முக்கிய காரணமாக இருக்கலாம்.

1981இல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை ஐந்தரை லட்சமாக இருந்து 1992 இல் ஏழு லட்சமாக உயர்ந்து 2012இல் 16 லட்சமாக உயர்ந்தது. நாட்டில் இடம்பெற்ற மூப்பது ஆண்டுகால உள்நாட்டு யுத்தம் இந்த ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது. மேலும் போசாக்கு குறைபாடு, வீதி விபத்துக்களும் தற்போது குறைபாடுகளை ஏற்படுத்துவதில் முக்கிய காரணிகளாக உள்ளன.

இலங்கையிலும் ஊனமுற்றவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டதிட்டங்கள் சில இருந்த போதும் சில அடிப்படைப் பொருளாதாரப் பாதுகாப்புகள் செய்யப்பட்டு இருந்தாலும் அவை பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மை. மேலும் இத்திட்டங்களை அறிந்துகொள்வதற்கான ஆற்றலோ கல்வித் திறனோ பாதிக்கப்பட்டவர்களிடம் இல்லை. இதனை பாதிக்கப்பட்டவர்களிடம் கொண்டு செல்வதற்கான செயற்திட்டங்களும் பெயரளவில் இருந்தாலும் கூட அவை நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் பின்னணிகளில் ஊனமுற்றவர்களின் குறைபாடுடையவர்களின் நிலை இலங்கை போன்ற நாடுகளில் எவ்வாறு இருக்கும் என்பதை கற்பனை செய்து பார்க்கமுடியும்.

ஊனமுற்றவர்கள் குறைபாடுடையவர்கள் (மாற்றுத்திறனாளிகள்) சார்பில் சமூக மட்டத்தில் அரோட் AROD போன்ற சில அமைப்புகள் உருவாகி செயற்பட்டு வந்தாலும் அங்குள்ள தேவைகளோடு ஒப்பிடுகின்ற போது இவை வறண்ட நிலத்தில் விழுகின்ற மழைத்துளி போன்றதே.

-என்.செல்வராஜா-
(நூலியலாளர், லண்டன்)

## இந்தியாவில் மீண்டும் உயர்ந்த கொரோனா


# புதிதாக 9,765 பேருக்கு தொற்று; 477 பேர் பலி

இந்தியாவில் மேலும் 477 பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை கொரோனா தொற்று தினசரி பாதிப்பு 551 நாளில் இல்லாதவகையில் 6,990 ஆக பதிவானது. ஆனால் நேற்று முன்தினம் இந்த பாதிப்பு 28.1 சதவீதம் அதிகரித்து 8,954 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்று புதிதாக 9,765 பேருக்கு தொற்று பாதிப்பு உறுதியானது. ( இதில் கேரளாவில் மட்டும் 5,405 பேர் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்).

இதுதொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், இந்தியாவில் நேற்று காலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில் புதிதாக 9 ஆயிரத்து 765 பேருக்கு தொற்று பாதிப்பு உறுதியாகி உள்ளது. இதன்மூலம் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 3,46,06,541 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல், தொற்று பாதிப்புகளுக்கு ஒரே நாளில் 477 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 4,69,724 ஆக உயர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆயுத ஒப்பந்தம் செய்ய இந்தியா செல்லும் ரஷ்ய ஜனாதிபதி புதின்

ரஷ்ய ஜனாதிபதி புதின் திங்கட்கிழமை இந்தியா வர உள்ள நிலையில், இருநாடுகளுக்கு இடையே ஆயுத ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

ரஷ்யாவிடமிருந்து தானியங்கி ஏ.கே 203 துப்பாக்கிகளை வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது. சுமார் 7 இலட்சத்து 50 ஆயிரம் துப்பாக்கிகளை வாங்கும் ஒப்பந்தத்தில் இந்தியா புதின் வருகையின் போது கையெழுத்திட உள்ளது. ஏற்கனவே எஸ்.400 ரக ஏவுகணைத் தடுப்பு சாதனங்களையும் இந்தியா வாங்கியுள்ளது.

ரஷ்யாவின் தொழில்நுட்ப உதவியுடன் இந்த துப்பாக்கிகள் உத்தரப்பிரதேச மாநிலம் அமேதியில் தயாரிக்கப்பட உள்ளன. புதின் கையெழுத்திட்டதும் முதலில் 70 ஆயிரம் துப்பாக்கிகள் ரஷ்யாவின் உதிரி பாகங்களுடன் தயாரிக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.



## தடுப்பூசி போட்டால் ஸ்மார்ட் போன் பரிசு

குஜராத்தின் ஆமதாபாதில், கொரோனா தடுப்பூசியை செலுத்திக் கொள்வோரில் ஒருவருக்கு, பரிசாக 60 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான ஸ்மார்ட்போன் வழங்கப்படஉள்ளது.

அங்கு முதல்வர் பூபேந்திர படேல் தலைமையிலான பா.ஜ, ஆட்சி நடக்கிறது. இங்கு, மக்கள் அனைவருக்கும், கொரோனா வைரசுக்கான தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் செலுத்தி முடிக்க வேண்டும் என்பதில், மாநில அரசு உறுதியாக உள்ளது.


இங்குள்ள ஆமதாபாதில், இதுவரை 78.7 இலட்சம் பேர் தடுப்பூசிகளை செலுத்தி உள்ளனர். இதில், 31 இலட்சம் பேர், இரண்டு டோஸ்களையும் செலுத்தி உள்ளனர்; 47.7 இலட்சம் பேர், முதல் டோஸை மட்டும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு இரண்டாவது டோஸை செலுத்தி முடிக்க, மாநகராட்சி நிர்வாகம் பல வழிகளில் முயற்சித்து வருகிறது. இந்நிலையில், இரண்டாவது டோஸ் செலுத்திக் கொள்ள, மக்களை ஊக்குவிக்கும் விதமாக, ஒரு பரிசு திட்டத்தை மாநில அரசு அறிமுகம் செய்துள்ளது.

நேற்று முன்தினம் முதல், வரும் 7 ஆம் திகதி வரை, தடுப்பூசி செலுத்திக்கொள்ளும் மக்களுக்காக, பரிசு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்களில் இரண்டாம் டோஸ் செலுத்திக்கொள்ளும் மக்களில், குலுக்கல் முறையில் ஒருவர் தேர்வு செய்யப்பட்டு, அவருக்கு 60 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான ஸ்மார்ட் போன் பரிசாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.



# சிறுத்தையிடம் போராடி குழந்தையை மீட்ட தாய்



வீட்டு வாசலில் இருந்தபோது, சிறுத்தை கவ்விச் சென்ற தன் குழந்தையை, துரத்திச் சென்று போராடி மீட்டுள்ளார் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த மலைவாழ் தாயொருவர்.

மத்தியப் பிரதேசம், சித்தி மாவட்டத்தில் உள்ள சஞ்சய் புலிகள் காப்பகத்துக்கு அருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்த கிரண், தன் குழந்தைகளுடன், குடிசை வாசலில் இருந்துள்ளார்.

அப்போது அங்கு வந்த ஒரு சிறுத்தை, அவருடைய, 8 வயது மகன் ராகுலை கவ்விச் சென்றது. இதனால் அதிர்ச்சி அடைந்த கிரண், தன் மற்ற இரண்டு குழந்தைகளை குடிசைக்குள் அனுப்பிவிட்டு, சிறுத்தையை துரத்திச் சென்றுள்ளார். காட்டுக்குள் ஒரு கி.மீ தூரத்துக்கு சென்ற அவர், சிறுத்தையை கம்பால் அடித்து தாக்கினார்.

அதையடுத்து, குழந்தையை விட்ட அந்த சிறுத்தை, அவரை தாக்கியுள்ளது சிறுத்தையுடன் அவர் போராடியுள்ளார். இதற்கிடையே, சத்தம் கேட்டு கிராம மக்களும் அங்கு வந்தனர். அதையடுத்து, சிறுத்தை காட்டுக்குள் தப்பிச் சென்றது.

சிறுத்தை தாக்கியதில், கிரண் மற்றும் அவருடைய மகனுக்கு காயம் ஏற்பட்டு உள்ளது.மிகவும் வீரத்துடன் சிறுத்தையுடன் போராடி, குழந்தையை காப்பாற்றிய அந்த தாயை, முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் உள்ளிட்டோர் பாராட்டி, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளனர்.

# தமிழகத்தில் திரிபு ஒமிக்ரான் தொற்று இதுவரை இல்லை

### -சுகாதாரத்துறை அமைச்சர் தகவல்-



புதிய வகை திரிபு ஒமிக்ரான் தொற்று பரவலின் எதிரொலியால், தமிழகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

கொரோனாவின் உருமாற்று தொற்றாக கருதப்படும் புதிய வகை வைரஸ் ஒமிக்ரான் பல்வேறு நாடுகளிலும் நுழைந்துவிட்டது. இதன் எதிரொலியால், இந்தியாவும் உஷார் நிலையில் உள்ளது. மேலும், தமிழகம் பொறுத்தவரையில் வெளிநாட்டில் இருந்து வரும் பயணிகளை கண்காணிக்க அனைத்து விமான நிலையங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று மதுரை விமான நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களை சந்தித்து பேசியதாவது:-

வெளிநாடுகளில் இருந்து விமானம் மூலம் வரும் பயணிகள் அனைவருக்கும் முதலில் காய்ச்சல் இருப்பதை கண்டறியப்படுகிறது. காய்ச்சல் 100 டிகிரி மற்றும் அதற்கும் மேல் இருப்பவர்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்படுகிறது. கொரோனா தொற்று இருக்கும் விமானப் பயணிகளுக்கு தனி வார்டில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர்களின் மாதிரிகளை மரபணு சோதனைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் வெளிநாடுகளில் இருந்து வந்த விமானப் பயணிகள் 477 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டதில் ஒமிக்ரான் கண்டறியப்படவில்லை.

மேலும், தமிழகத்தில் பள்ளி, சந்தை உள்பட கூட்டம் அதிகம் இருக்கும் 8 பகுதிகளை சேர்ந்தவர்களுக்கு கொரோனா தொற்று உறுதியானால், அவர்களின் மாதிரிகளை தினமும் மரபணு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, இதுவரை யாருக்கும் ஒமிக்ரான் பாதிப்பு கண்டறியப்படவில்லை.

இதனால், தமிழகத்தில் இதுவரை ஒமிக்ரான் பாதிப்பு இல்லை. இருப்பினும், பொது மக்கள் கொரோனா தொற்றில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள பாதுகாப்பு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்றார்.

# இந்தியாவில் 10 ஆண்டுகளில் 1,160 யானைகள் படுகொலை



இந்தியாவில் பல்வேறு காரணங்களால், கடந்த 10 ஆண்டுகளில் 1,160 யானைகள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம், பாவூர்சத்திரத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் பாண்டியராஜா, தகவல் அறியும் உரிமை சட்டத்தில் எழுப்பிய கேள்விகளுக்கு யானைகள் திட்டவல்லுனரும், தலைமை பொது தகவல் அலுவலருமான முத்தமிழ் அளித்துள்ள பதிலில் 2020 டிசம்பர் 31 வரை, கடந்த 10 ஆண்டுகளில் 186 யானைகள் ரயில் மோதி இறந்துள்ளன.

அதிகபட்சமாக அசாம் மாநிலத்தில் 62 யானைகள் இறந்துள்ளன. தமிழகத்தில் 5 யானைகள் பலியாகியுள்ளன. மின்சாரம் தாக்கி 741 யானைகள் இறந்துள்ளன.

இதில் அதிக பட்சமாக ஒடிசாவில் 133 தமிழகத்தில் 93 யானைகள் இறந்துள்ளன. இதே கால கட்டத்தில், விஷம் வைத்தும் யானைகள் கொல்லப்பட்டுள்ளன. இதில் அதிகபட்சமாக அசாம் மாநிலத்தில் 32 யானைகள் கொல்லப்பட்டுள்ளன. தமிழகத்தில் ஒரு யானை கொல்லப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி நாடு முழுவதும் 29 ஆயிரத்து 964 யானைகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக கர்நாடகாவில் 6,049 அசாமில் 5,719 கேரளாவில் 5,706 தமிழகத்தில் 2,761 யானைகள் உள்ளன.

நாடு முழுதும் யானைகளை பாதுகாக்க, 10 ஆண்டுகளில் 212.5 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. யானைகளை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஜயோதா Jayoda
திகதி : 2021-12-01
வெற்றி வாரம் : 1790 வர்ணம் : செம்மஞ்சள்
சுப்பர் ஜக்பொட் ரூ. 28,375,208/-
வெற்றி இலக்கங்கள் 24 37 55 60 C
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,287,780/-
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 28,493,900/-

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.01
சீட்டிழுப்பு இல: 1406
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,397,440/-
வெற்றி இலக்கங்கள் 28 29 58 62 L
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி SASIRI
சீட்டிழுப்பு வாரம் 106
சீட்டிழுப்பு திகதி 2021.12.01
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 35 37 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,435,740/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி : 2021-12-01
வெற்றி வாரம் : 3292
வர்ணம் : பச்சை
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,374,707/-
வெற்றி இலக்கங்கள் 29 37 44 51
மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,180,300/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1580
சீட்டிழுப்பு திகதி 2021.12.01
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Z 17 30 48 68
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,821,360/-

சனிதா Shanida
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.01
சீட்டிழுப்பு இல: 3741
வர்ணம்: ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,977,880/-
வெற்றி இலக்கங்கள் 26 28 34 73 C
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.



சிறு விளம்பரம்
தேவை
O+ குருதி வகையைச் சேர்ந்த 27 வயதுடைய ஆண் ஒருவருக்கு O+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத்தேவை. உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஆண், பெண் 20-45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு : 076 8974925, 077 1661476

# ஒமிக்ரொன் திரிபை எதிர்த்துப் போராட தடுப்பூசியை கட்டாயமாக்க வேண்டும்

**-வலியுறுத்தும் ஐரோப்பிய ஒன்றியம்-**

கொரோனா வைரஸ் தொற்று மற்றும் ஒமிக்ரொன் திரிபை எதிர்த்துப் போராடுவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் கட்டாய தடுப்பூசியை அமுல்படுத்த வேண்டியது தொடர்பில் கரிசனை காட்ட வேண்டும் என அதன் தலைவர் ஹர்சுலா வன்டெர் லியன் தெரிவித்துள்ளார்.

புதிய வைரஸ் திரிபினை எதிர்த்துப் போராடுவதற்கு தடுப்பூசி முக்கிய பங்கு வகிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். சுமார் 24 நாடுகளுக்கும் அதிகளவில் ஒமிக்ரொன் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இது கண்டறியப்பட்ட நாள் முதல் பயணக்கட்டுப்பாட்டை ஐரோப்பிய நாடுகள் இறுக்கமாக்கியுள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் இதுவரை தடுப்பூசி செலுத்திக்கொள்ளவில்லை.




எனவே தற்போது தடுப்பூசியைக் கட்டாயமாக்குவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது. பொதுவான அணுகுமுறையுடன் தடுப்பூசி செலுத்துவதனை கட்டாயமாக்க வேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## தாய்வானை சீனா தாக்கினால் ஜப்பானும் அமெரிக்காவும் வேடிக்கை பார்க்காது

**-எச்சரிக்கும் ஷின்சோ அபே-**



சீனா தாய்வானை தாக்கினால் ஜப்பானும் அமெரிக்காவும் பொறுத்துக் கொண்டு இருக்காது, இதை பீஜிங் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஜப்பானிய முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே எச்சரித்துள்ளார்.

அத்துடன் தாய்வான் மீது ஆயுதம் ஏந்திய படையெடுப்பு ஜப்பானுக்கு பெரும் ஆபத்தாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தாய்வானிய சிந்தனைக் குழுவான தேசிய கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் உரையாற்றும்போதே அபே இதனைக் கூறினார்.

ஜனநாயக ரீதியில் ஆளப்படும் தீவுக்கு எதிராக தனது நாட்டின் இறையாண்மை உரிமைகோரல்களை ஜனாதிபதி ஜி ஜின்பிங் வலியுறுத்த முற்படுவதால், சீன உரிமை கோரும் தாய்வான் மீதான பதற்றங்கள் அதிகரித்துள்ளன. தாய்வான் அரசாங்கம் அமைதியை விரும்புவதாகக் கூறுகிறது, எனினும் தேவைப்பட்டால் தன்னைத் தற்காத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் கூறுகின்றது.

# ஹோண்டுராசில் முதல் பெண் ஜனாதிபதி தெரிவு



ஹோண்டுராசில் முதல் பெண் ஜனாதிபதியாக சியோமாரா காஸ்ட்ரோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

லத்தீன் அமெரிக்க நாடான ஹோண்டுராசில் கடந்த 12 ஆண்டுகளாக வலதுசாரி கட்சியான தேசிய கட்சியின் ஆட்சி நடந்து வந்தது.

இந்த நிலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி அங்கு ஜனாதிபதி தேர்தல் நடந்தது. இதில் ஜனாதிபதி பதவிக்காக ஆளும் தேசிய கட்சியின் சார்பில் நஸ்ரி அஸ்புராவும், அவரை எதிர்த்து இடதுசாரி கட்சியான சுதந்திர கட்சியின் சார்பில் சியோமாரா காஸ்ட்ரோவும் போட்டியிட்டனர். இவர் அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மானுவல் ஜெலயாவின் மனைவி ஆவார்.

இந்த நிலையில் நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகின. இதில் மொத்தம் பதிவான வாக்குகளில் சியோமாரா காஸ்ட்ரோ 53 சதவிகிதம் வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட அஸ்புரா 34 சதவிகித வாக்குகளுடன் தோல்வியை தழுவினார். இதன் மூலம் 12 ஆண்டுகளுக்கு பின்னர் அந்த நாட்டில் இடது சாரி கட்சி ஆட்சியை பிடித்துள்ளது. மேலும் இந்த வெற்றியின் மூலம் ஹோண்டுராஸ் நாட்டின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையையும் சியோமாரா காஸ்ட்ரோ பெற்றுள்ளார்.

# அமெரிக்காவிலும் கால் பதித்த ஒமிக்ரொன் திரிபு வைரஸ்



உருமாறிய கொரோனாவான ஒமிக்ரொன் வைரஸ், தென் ஆப்பிரிக்காவில் தோன்றி பிற நாடுகளில் பரவி வருவது, உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

இந்தநிலையில், உலகை அச்சுறுத்தி வருகிற ஒமிக்ரொன் வைரஸ், அமெரிக்காவிலும் நுழைந்து விட்டது. ஆப்பிரிக்க நாடு ஒன்றில் இருந்து கலிபோர்னியா திரும்பி வந்த ஒருவருக்கு இந்த வைரஸ் பாதிப்பு உறுதியாகி உள்ளது. பாதிக்கப்பட்ட நபரும், அவரது நெருங்கிய தொடர்புகளும் அடையாளம் காணப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. அமெரிக்காவில் இந்த வைரஸ் நுழைந்திருப்பது இதுவே முதல் முறை.

# அமெரிக்காவில் கேரள மாணவி சுட்டுக்கொலை



அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் கேரளாவை சேர்ந்த 19 வயது மாணவி மரியம் சூசன் சுட்டுகொல்லப்பட்டுள்ளார். உயிரிழந்த மாணவி, மேத்யூ மற்றும் பின்சி தம்பதியரின் மகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரியம் சூசன் தனது வீட்டில் தூங்கிக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அப்போது வீட்டின் மேல் மாடியில் இருந்து துப்பாக்கி தோட்டாக்கள் வந்து உள்ளது. தோட்டாக்கள் அவர் மீது பாய்ந்து மரணமடைந்து உள்ளார். அவர் மீது தாக்குதல் நடத்தியவர் சூசன் வீட்டின் மேல்மாடியில் வசிப்பவர் என கூறப்படுகிறது

மாண்ட்கோமரி பொலிஸார் இது குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். உயிரிழந்த மரியம் சூசன் மேத்யூ கேரளா பத்தனம்திட்டாவில் உள்ள நிராணம் பகுதியைச் சேர்ந்தவர். இவருக்கு இரண்டு சகோதரர்கள் உள்ளனர். இவர்களது குடும்பம் 4 மாதங்களுக்கு முன்புதான் அமெரிக்கா வந்துள்ளது.இதற்கு முன் அவர்கள் மஸ்கட்டில் வசித்து உள்ளனர். சூசன் உயர் பள்ளி கல்வியை இந்தியாவில் முடித்து உள்ளார்.

இந்த மாத தொடக்கத்தில் கேரளாவைச் சேர்ந்த தொழிலதிபர் சாஜன் மேத்யூ என்பவர் கொள்ளை முயற்சியின் போது 15 வயது சிறுவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்க்கது.

# 20 நாடுகளில் 226 பேருக்கு திரிபு ஒமிக்ரொன் பாதிப்பு

**-அமெரிக்கா அதிர்ச்சி தகவல்-**

ஒமிக்ரொன் தென் ஆப்பிரிக்காவில் தோன்றி, இப்போது உலக நாடுகளில் எல்லாம் கால் தடம் பதிக்கத்தொடங்கி உள்ளது.

கொரோனாவின் உருமாறிய வைரசான ஒமிக்ரொன் தென் ஆப்பிரிக்காவில் தோன்றி, இப்போது உலக நாடுகளில் எல்லாம் கால் தடம் பதிக்கத்தொடங்கி உள்ளது. இந்த வைரஸ் 50 உருமாற்றங்களை தன்னிடம் கொண்டிருப்பதால் மோசமான ஒன்று என்று விஞ்ஞானிகள் கவலை அடைந்துள்ளனர்.

இந்த ஒமிக்ரொன் வைரஸ் தற்போது 20 நாடுகளில் 226 பேருக்கு உறுதியாகி இருப்பதாக அமெரிக்க தொற்றுநோய் நிபுணர் ஆண்டனி பாசி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஆண்டனி பாசி கூறும்போது, இது டெல்டா போன்ற பிற வகை வைரஸ்களில் இருந்து வித்தியாசமான உருமாற்றங்களை கொண்டுள்ளது. இருப்பினும் இது மிகவும் பரவக்கூடியதா என்பதை தீர்மானிப்பது கடினமாக உள்ளது என தெரிவித்தார்.

**-வாழ்க்கைச் செலவு கூடிய நகரங்கள் பட்டியல்-**

# இஸ்ரேலின் டெல் அவிவ் நகரம் முதலிடம் பிடித்தது



உலகில் வாழ்க்கைச் செலவு அதிகமான நகரங்களின் பட்டியலில் பாரிஸ், சிங்கப்பூர் மற்றும் சூரிச் நகரங்களைப் பின்னுக்கு தள்ளி இவ்வாண்டில் இஸ்ரேலின் டெல் அவிவ் நகரம் முதலிடம் பிடித்துள்ளது.

உலக நாடுகளில் உள்ள பெரிய நகரங்களின் வாழ்க்கைச் செலவினம் குறித்து 173 நகரங்களில் உலக பொருளாதார நிபுணர் குழு ஆய்வு நடத்தி அறிக்கை தயாரித்துள்ளது.

இந்நிலையில் 2021 அதிக வாழ்க்கைச் செலவினம் கொண்ட நாடுகள் பட்டியலில் டெல் அவிவ் நகரம் முதலிடம் பிடித்துள்ளது.

டொலருக்கு நிகரான ரஷ்ய நாணயமான ஷேக்கலின் வலிமை, போக்குவரத்து செலவு, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்ததன் காரணமாக டெல் அவிவ் வாழ்க்கைச் செலவு அதிகமாக நகரங்களில் முதல் இடத்திற்கு வந்துள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான பட்டியலில், பாரிஸ், சூரிச், ஹொங்கொங் ஆகிய நகரங்கள் கூட்டாக முதலிடத்தில் இருந்தன. இந்த ஆண்டு பட்டியலில் பாரிசும், சிங்கப்பூரும் கூட்டாக இரண்டாவது இடத்திலும், சூரிச், ஹொங்கொங், நியூயோர்க் 6 ஆவது இடத்திலும், ஜெனீவா 7 ஆவது இடத்திலும் உள்ளன. லொஸ் ஏஞ்சல்ஸ் 9 ஆவது இடத்திலும், ஒசாகா 10 ஆவது இடத்திலும் உள்ளன.

கொரோனா காரணமாக சமூக கட்டுப்பாடுகள் பொருட்களின் விநியோகத்தை சீர்குலைத்தது. இது பற்றாக்குறை மற்றும் விலை உயர்வுக்கு வழி வகுத்துள்ளது. இந்த ஆண்டு வாழ்க்கைச் செலவு குறியீட்டில் இதன் தாக்கத்தை காண முடிகிறது என இந்த பட்டியலைத் தயாரித்த பொருளாதார நிபுணர் குழுவின் சர்வதேச தலைவர் உபாசனா தத் தெரிவித்தார்.

உலகில் வாழ்க்கைச் செலவு அதிகமான முதல் 10 நகரங்களாக முறையே டெல் அவிவ் (இஸ்ரேல்), பாரிஸ் (பிரான்ஸ்), சிங்கப்பூர், சூரிச் (சுவிட்சர்லாந்து), ஹொங்கொங், நியூயோர்க் (அமெரிக்கா), ஜெனீவா (சுவிட்சர்லாந்து), கோபன்ஹேகன் (டென்மார்க்), லொஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா), ஒசாகா (ஜப்பான்) ஆகியவை இடம் பிடித்துள்ளன.


# உலகளவில் 26.37 கோடியை தாண்டிய கொரோனா பாதிப்பு

உலகம் முழுவதும் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதனிடையே தென் ஆப்பிரிக்காவில் ஒமிக்ரொன் என்ற உருமாறிய கொரோனா வைரஸ் தோன்றி பரவத்தொடங்கி இருப்பது உலக நாடுகளை அதிர வைத்துள்ளது.

இந்நிலையில் நேற்றைய நிலவரப்படி, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 26.37 கோடியை தாண்டியுள்ளது.

# ருவிட்டரின் புதிய சிஇஓ.வாக பராக் அகர்வால் பதவியேற்பு

**ஒரு வருடத்திற்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் ஊதியம்**



ருவிட்டரின் தலைமை தொழில்நுட்ப அதிகாரியாக இருந்து வந்த இந்திய வம்சாவளி பராக் அகர்வால் புதிய தலைமை செயல் அதிகாரியாக பொறுப்பேற்றார்.

ருவிட்டர் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக 2017 ஆம் ஆண்டு முதல் இருந்து வந்த, ஜாக் டோர்சி பதவி விலகுவதாக அண்மையில் அறிவித்தார். இதை தொடர்ந்து, ருவிட்டரின் தலைமை தொழில்நுட்ப அதிகாரியாக இருந்து வந்த இந்திய வம்சாவளி பராக் அகர்வால் புதிய தலைமை செயல் அதிகாரியாக பொறுப்பேற்றார்.

இதன் மூலம் அவர் சிலிக்கான் பள்ளத்தாக்கு தலைமை நிர்வாக அதிகாரிகளின் குழுவில் சேர்ந்துள்ளார், இந்த பட்டியலில் ஏற்கனவே சுந்தர் பிச்சை, சத்யா நாதெல்லா ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

இந்தநிலையில் ருவிட்டரின் தலைமை செயல் அதிகாரியாக பொறுப்பேற்றுள்ள பராக் அகர்வாலுக்கு ஆண்டுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் ஊதியமாக பெறுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர போனஸ் உள்ளிட்ட பிற சலுகைகளும் அவருக்கு கிடைக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஒமிக்ரொன் பரவலால் தென் ஆப்பிரிக்காவில் கொரோனா பாதிப்பு 2 மடங்காக உயர்வு

தென் ஆப்பிரிக்க விஞ்ஞானிகள், புதிய ஓமைக்ரான் மாறுபாட்டை தொடர்ந்து, கொரோனா பாதிப்புகள் விரைவாக அதிகரிக்க தயாராகி வருவதாக கூறினர்.

அந்நாட்டில் புதிய உருமாறிய கொரோனா திரிபு ஓமைக்ரான் முதலில் கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை கண்டறியப்பட்டுள்ள கொரோனா வைரஸ்களில் ஆபத்தானதாக அறியப்படுகிறது.

ஓமைக்ரான் பரவலை தொடர்ந்து தென் ஆப்பிரிக்காவில் கொரோனா பாதிப்பு இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. தென் ஆப்பிரிக்காவில் புதன்கிழமையன்று கொரோனா பாதிப்பு 4,373 இல் இருந்து 8,561 ஆக உயர்ந்துள்ளது.

அந்நாட்டில் நவம்பர் மாத தொடக்கத்தில், 7 நாள் சராசரியாக ஒரு நாளைக்கு சுமார் 200 புதிய பாதிப்புகள் ஏற்பட்டன. ஆனால் நவம்பர் நடுப்பகுதியில் புதிய பாதிப்புகள் வேகமாக அதிகரிக்க ஆரம்பியுள்ளன.

தென் ஆப்பிரிக்க விஞ்ஞானிகள் புதிய ஓமைக்ரான் மாறுபாட்டின் கண்டுபிடிப்பை தொடர்ந்து, கொரோனா பாதிப்புகள் விரைவாக அதிகரிக்க தயாராகி வருவதாக கூறினர்.



வரும் காலங்களில் பாதிப்புகள் இரட்டிப்பாகவோ அல்லது மும்மடங்காகவோ இருப்பதை நாம் உண்மையில் பார்க்கப் போகிறோம்'என்று உலக சுகாதார அமைப்பின் பிராந்திய வைராலஜிஸ்ட் வைத்தியர் நிக்ஸி குமேட்-மொலெட்ஸி கூறினார்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.